# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**பிப்ரவரி 2003 ஜீவியம் 8 மலர் 10**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| லைப் டிவைன் | 14 |
| இம்மாதச் செய்தி | 22 |
| அஜெண்டா | 23 |
| அன்பரும் நண்பரும் | 25 |
| சரணாகதி சமாதியைக் கடந்தது | 27 |
| அன்பர் கடிதம் | 32 |
| அபரிமிதமான செல்வம் | 34 |
| சாவித்ரி | 38 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 40 |
| இலட்சியத் திருமணம் | 55 |

☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**748) பரம்பொருள் நம்மைத் தீண்டாமல் பரம்பொருள் நமக்குச் சித்திக்காது. அவனால் முடியாததைச் சாதிக்க சமூகம் உதவாமல் மனிதனால் சாதிக்க முடியாது. தனிமனிதனுடைய ஆர்வமே வளர்ந்து சமூகத்தின்மூலம் அவனிடம் மீண்டும் வருகிறது. மனிதனே ஆரம்பம்.**

*பரம்பொருளால் சித்திக்கும் பரம்பொருள்.*

அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் பரம்பரை இந்துக்கள். எந்தக் காரியம் முடியவும் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் சம்மதிக்கவேண்டும் என்பது ஆன்மீகச் சட்டம்.

பரம்பொருள் நமக்குச் சித்திப்பது என்றால் என்ன? உடலாலான மனிதன் மனத்தால் செயல்பட்டாலும் ஆன்மாவே அவனுக்குத் தலைவன். ஆன்மா மனிதனுக்குச் சித்தித்தால்தான் பிறகு எதையும் சித்தி என நாட முடியும்.

அகந்தை அழிந்தபின் ஆன்மா விடுதலையடைகிறது. விடுதலையடைந்த ஆன்மா உயர்ந்து சென்று சச்சிதானந்தம்வரை செல்லும். சச்சிதானந்தம் எட்டினால் அங்கு பரம்பொருளின் புருஷனைத் தொடலாம். அதைக் கடந்து நிர்வாண சித்தியை நாடுபவர்களும் உண்டு. அதையும் கடந்து பிரம்மத்தை எட்டித் தொடலாம். இதுவரை உலகம் அறிந்தது. இது மேல் நோக்கியப் பயணம். அடுத்தது கீழ்நோக்கிய பயணம். அப்பயணத்தை மோட்சம்மூலம் பெற முடியாது. சத்திய ஜீவியம் மூலம் பெறலாம். கீழ்நோக்கிய பயணத்தில் பரம்பொருள் இறங்கிவந்து நம் வாழ்விலும் பலிக்கமுடியும். இது பலிக்க நம்மைப் பரம்பொருள் தீண்டி இருக்கவேண்டும். பரம்பொருள் நம்மைத் தீண்டாமல், நமக்கு உலகில் பரம்பொருள் சித்திக்காது.



ஒரு உதாரணத்தால் இதை விளக்க முயல்கிறேன். பரம்பொருள் வாழ்வில் சித்திப்பது எனில் பரம்பொருள் நம் வாழ்வை ஏற்று நடத்துவதாகும். அது சத்தியஜீவிய சித்தி.

சமூகத்தில் வாழும் நாம் ஒரு வகையில் தனிமனிதன். மற்றொரு வகையில் நாம் அதன் அங்கம். தனிமனிதன் ஆலைகள் கட்டியிருக்கிறான், பல்கலைக்கழகங்கள், பாங்குகள் நிறுவியுள்ளான். சமூகம் தனிமனித வாழ்வில் பலித்ததால் தனிமனிதன் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ முடிந்தது. ஒரு மனிதன் தனியாக நின்று, சமூகத் தொடர்பில்லாமல், சமூகம் அவனுக்குதவ முன்வாராமல் பாங்கையோ, ஆலையையோ, நிறுவமுடியாது. இவன் பாங்கு ஆரம்பித்தால் அனைவரும் டெபாசிட் போடவேண்டும், கடன் வாங்கவேண்டும். ஆலை ஆரம்பித்தால் தொழிலாளர் வேலைக்கு வரவேண்டும், அவன் சரக்கை மார்க்கட் வாங்கவேண்டும். இவை ஓரிரு அம்சங்கள். சமூகம் தனிமனிதனை வாரி அணைத்து உச்சிமோந்து உயிர் கொடுத்தாலன்றி அவனால் எதையும் சாதிக்கமுடியாது. அதேபோல் பரம்பொருள் மனிதனை நாடித் தீண்டி ஆதரவு அளிக்காமல் மனிதனால் வாழ்வில் பரம்பொருளைச் சித்திக்க முடியாது.

இதற்கடுத்த கட்டமும் உண்டு. தனிமனிதன் ஜீவாத்மா என்பதால் அவ்வகையில் சமூகத்தைவிட உயர்ந்தவன். சமூகம் இவனுக்கு உதவுவதால்தான் தனிமனிதன் சாதிக்கிறான். அதற்கு அடிப்படையானது தனிமனிதனுடைய ஆர்வம். முன்னோடியான மனிதன் தன் எண்ணத்தாலுயர்ந்து, செயலால் பலித்து, உணர்ச்சியால் மலர்வதால், அத்தகைய தனிமனிதர்களுடைய ஆர்வம் சமூகத்தில் அடித்தளத்தை நிரப்பி, அதிலிருந்து எழுச்சியாக உயர்ந்து சிகரத்தைத் தொட்டு சாதிக்கிறது. சமூகச் சாதனை என முடிவாக நாம் காண்பது ஆரம்பத்தில் தனிமனித சாதனையேயாகும். மனிதனே

முதல், அவனே ஆரம்பம், அவனே முடிவு. ஜீவாத்மா பரமாத்மாவின் பகுதி என்பதால் மனிதனுக்குச் சமூகத்தைவிட உயர்ந்த இச்சிறப்புண்டு.

- **மனித முயற்சியால் எதுவும் முடியாது, அருள் அவசியம்.**
- **மனித முயற்சியும், மனிதனுமே அடிப்படை, அஸ்திவாரம்,**

என்ற இரண்டு கருத்துகளும் எதிரானவையாகத் தோன்றும். முதற்கருத்து நம் மரபில் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என வழங்குகிறது. அடுத்தது எதிராகக் காணப்பட்டாலும் ஜீவாத்மாவே பரமாத்மா என்ற ஸ்ரீ அரவிந்தர் கருத்துப்படி முரணில்லை என்று கொள்ளலாம்.

தனிமனித முயற்சியே சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதால் தனிமனிதனே ஆரம்பம். சமூகத்தின் உதவியின்றி தனிமனிதன் பல காரியங்களைச் சாதிக்கமுடியாது என்பதுபோல், பரம்பொருளின் ஸ்பர்சமின்றி நாம் பரம்பொருளை அடையமுடியாது.

கல்லூரி, ரயில்வே, கஜானா, போலீஸ், போன்றவையின்றி மனிதன் எங்கே? அவன் வாழ்வை நடத்த சமூகத்தின் அனைத்து அம்சங்களும் தேவை. காட்டில் தவம் செய்யும் முனிவர்போல் ஊரில் குடும்பம் நடத்தமுடியாது.

நாட்டில் அரசியலில் சாதிக்க மனிதனுக்கு நாடு அவனைத் தீண்டவேண்டும். தனிமனிதன் அரசியலில் சாதிக்கமுடியாது. அதற்குக் கட்சி ஆதரவு தேவை, மக்கள் ஆதரவு வேண்டும்.

நாட்டின் ஆதரவின்றி, நாட்டு மக்களின் ஆதரவின்றி அரசியலில் மனிதன் எதையும் சாதிக்கமுடியாது. அரசியல் என்பது மக்களின் ஸ்பர்சமாகும்.



பரம்பொருளின் ஸ்பர்சமின்றி பரம்பொருள் சித்திக்காது என்பதில் ஸ்ரீ அரவிந்தர் சிறப்பாகக் கூறுவது மேலுலகிலுள்ள பரம்பொருளையன்று, நம்முள்ளேயுள்ள பரம்பொருள் எழாமல், எழுந்து நம் வாழ்வில் மிளிராமல் பரம்பொருள் சித்திக்காது என்கிறார்.

பரம்பொருள் சித்திப்பது மனித முயற்சியாலன்று, பரம்பொருளின் அருளால் என்பதை இப்படிக் கூறுவது லீலையின் உட்கருவை உணர வைப்பதாகும்.

✪ ✪ ✪

## 749) அவதாரம் கண்டத்தில் அகண்டம்.

***Avatar is the infinite in the finite.***

மனிதன் சிறியவன். இறைவன் அனைத்தையும் தன்னுட் கொண்டவன், அகண்டம். மனிதன் கண்டம். அவதாரப் புருஷன் சிறிய மனிதனிடையே பெரிய புருஷனாக அவதரித்தவன். தத்துவம் இறைவனை அகண்டமாகவும், சிருஷ்டியின் ஜீவராசிகளைக் கண்டமாகவும் வர்ணித்ததுடன், நாம் கண்டமாக (சிறியதாக) காண்பது உண்மையில் அகண்டமான பிரம்மம் என்றும் கூறுகிறது. நம் கண்ணுக்குச் செங்கல் களிமண். ஞானதிருஷ்டிக்குச் செங்கல் பிரம்மம். எல்லா மனிதர்களும் அப்பார்வைக்கு அகண்டம், இறைவன், பிரம்மம். இதை நாம் அறியமுடியாவிட்டாலும் அவதாரப்புருஷனை இறைவனாக மனம் ஏற்கும். அவதாரத்தில் ஆண்டவனைக் காணும் பார்வையை மேலும் கூர்ந்து கவனித்தால் அனைவரும் ஆண்டவன் என்றறியலாம்.

இராஜகுமாரன் நாடகத்தில் பிச்சைக்காரனாக நடித்தால், பிரதம மந்திரி கிரிக்கெட் விளையாடினால், பெர்னார்ட் ஷா ஆஸ்பத்திரியில்

படுக்கையாக வந்து சேர்ந்தால், நாம் அவர்களைப் பிச்சைக்காரனாகவோ, வியாதியஸ்தராகவோ மட்டும் புரிந்துகொள்வதில்லை. இராஜகுமாரன், பிரதம மந்திரி, பேரறிஞர் நம் கண்ணுக்குத் தெரியாமற் போவதில்லை. மகாத்மாவையும், மார்ட்டின் லூதரையும், ஏசுவையும், இன்று உலகில் பிரபலமான பலரையும் வெறும் மனிதர்களாக உலகம் நடத்தியதுண்டு. அவர்கள் பெருமை வெளிவந்த பின்னரே அவர்களை உலகம் பாராட்டியது. அவர்களுடைய திறமை செயல்பட்டு பலித்தபின் உலகம் அவர்களை ஏற்றது. நம் ஆன்மீகத் திறமை செயல்பட்டு வெளிவந்தால் எல்லா ஜீவராசிகளும் இறைவன் என அறியலாம். கண்டமான மனிதனை அகண்டமான பிரம்மமாகக் காணமுடியும். அதுவே பூரணயோகத்திற்குரிய பார்வை. சூட்சுமப் பார்வையாக ஆரம்பித்து ஞானதிருஷ்டியாகி, திரிகாலத் திருஷ்டியாக மாறுவது யோகம்.

அன்னை ஆசிரமத்தில் நடந்து போய்க்கொண்டிருக்கும்பொழுது புதிய carpet கம்பள விரிப்பின்மீது நடந்தவர் திடீரென நின்று கீழே பார்த்தவர், “இக்கம்பளம் என்னுடன் பேசிற்று. நான் அழகாக இருக்கிறேன், பார் என்றது” என்று கூறினார். அன்னைக்குக் கம்பளத்தின் குரல் கேட்டது. சக்ரவர்த்தி சாலமனுக்கு விலங்கு பாஷை புரியும்.

கண்டமான ஜடப்பொருள்களிடையே நாமும் ஜடமாக, கண்டமாகப் பிறந்துவிட்டோம். நாம் நம்மை கண்டமில்லை, உள்ளுறை இறைவனை நான் கண்டபோது அது அகண்டம் (infinity) என்று அறிந்தேன் என்ற நிலைக்கு வந்தால், உலகில் அனைத்தும் அகண்டமாகத் தெரியும். ஆரம்பத்தில் மலரிலும், குழந்தையிலும், கடற்பரப்பிலும், வானவெளியிலும் அகண்டம் தெரியும். பாரதி சிறிய கழுதைக்குட்டியைப் பார்த்தவர் அதன் அழகை ரசித்துக் கட்டி முத்தமிட்டார். பாரதியின் கண்ணுக்கு அது கழுதைக்குட்டியில்லை, அழகுவாய்ந்த இறைவனின் திருவுருவம்.



அவதாரப் புருஷர்களையும் சிறுவயதில் உலகமோ, உடனுள்ளவரோ பிரம்மமாக அறிவதில்லை. ஒரு சிலர் கண்ணுக்கே அது தெரியும். ஜோஸ்யர் சொல்வதுண்டு. ஜோஸ்யம் பலிக்கட்டும் என்று உலகம் காத்திருக்கும்.

பரமஹம்சர் கண்ணுக்கு நரேன் மனிதனாகத் தெரியவில்லை. நரேனுடைய விசேஷ அம்சம் தெரிந்தது. நிஷ்டையில் நரேன் பிறந்த சந்தர்ப்பத்தை அவரால் பார்க்க முடிந்தது. அதை அறிந்தபின் நரேனைத் தேடி காலேஜுக்குப் போய் இந்தப் புரோகிதர் நரேனுக்கு அவமானத்தைத் தருவார். என்னைத் தேடி கல்லூரிக்கு வரவேண்டாம், எனக்கு வெட்கமாயிருக்கிறது என்பார். உன்னைக் காணாவிட்டால் என் நெஞ்சத்தை பிழிந்தெடுக்கிறது என்பார் பரமஹம்சர்.

அவதாரம் தன் தெய்வாம்சத்தை வெளியிட்டபின் அனைவரும் அறிவர். வெளியிடுமுன் ஒரு சிலர் அறிவார்கள். அன்னை மனதில் பலித்தால் மனிதரெல்லாம் பிரம்மம் (அகண்டம்) என பக்தரால் அறியமுடியும்.

கடல் அளவு கடந்தது. பிரம்மாண்டமான நீர்ப்பரப்பு. அதன் நீர் உப்பு ஆனதால் பயன்படுத்த முடியாது. பரவெளியை நிரப்பியுள்ள பரம்பொருள் அத்தகையது.

வெய்யிலால் தூய நீர் உப்பிலிருந்து பிரிக்கப்பட்டு மேகமாகி, மழையாகப் பொழிந்து ஏரி, குளம், ஆறு, வாய்க்கால், கிணறு ஆனால் அகண்டமான கடலைக் கண்டமான கிணறாகக் காண்கிறோம்.

**வற்றாத ஊற்றுள்ள கிணறு தன் தன்மையால் அகண்டமாவதைப்போல் மனிதப் பிறவியில் அவதாரம்.**

பரம்பொருள், பரமாத்மா, பராத்பரா, பரபுருஷா என்ற சொற்கள் அகண்டமான ஆண்டவனைக் குறிக்கின்றன. பரமாத்மா

ஜீவாத்மாவாகி உடலை ஏற்று மனிதனாகப் பிறக்கிறது. உடலான மனிதன் பரிணாம வளர்ச்சியால் உணர்வையும், மனத்தையும் பெறுகிறான். தபஸ்வி மனத்திலுள்ள மனோமயப் புருஷனைக் கண்டு, அதன்மூலம் ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் அடைந்து மோட்சம் பெறுகிறான். இது மனித முயற்சி. அருள் செயல்பட்டு ஆண்டவன் மனிதனாகப் பிறப்பெடுப்பது அவதாரம்.

- **மனித ஜீவனுக்கு உடல், உணர்வு, மனம், ஆன்மா, என்பவை பகுதிகள்.**
- **இவை அனைத்தும் சேர்ந்தது ஜீவன்.**
- **பரமாத்மா, ஜீவாத்மாவைத் தேடி வரும்பொழுது உடலில் ஆன்ம விழிப்புள்ளவன், உணர்வில் அதுபோன்றவன், மனத்தால் பரம்பொருளைப் பெறுபவன், ஆன்மாவால் பலன் பெறுபவன் என்பவருண்டு.**
- **ஜீவாத்மாவைத் தேடிவரும் பரமாத்மாவை மனித ஆன்மா ஏற்றால், மனிதன் மகாத்மாவாகிறான்.**
- **அதேபோல் மனோமயப் புருஷன் பெற்றால், genius மேதை பிறக்கிறான்.**
- **உணர்வில் பரமாத்மா செயல்பட்டால் மாவீரன் ஜனிக்கிறான்.**
- **ஜீவனில் பரமாத்மா ஏற்கப்பட்டால் அவன் அவதாரமாகிறான்.**
- **ஜீவனில் ஏற்ற பரமாத்மா, உடலால் ஏற்கப்பட்டதைப்போல் தெரியும்.**
- **ஏனெனில் ஜீவனுக்குள்ள முழுமையான அம்சம் உடலுக்கும் உண்டு.**



### *சத்தியஜீவன் அவதாரத்திலிருந்து வேறுபட்டவன்:*

❄ **சைத்தியப் புருஷன் விழித்து மௌனம், திருஷ்டி, யோகம், தெய்வீகம் மூலம் சத்திய ஜீவியத்தை அடைந்தால், அதே சமயம் பரிணாம மாற்றம் உணர்விலும், உடலுக்கும் போய் சைத்தியப் புருஷனுக்கு (substance) உடலுக்குள்ள உரமும் வலிமையும் வந்து, உடலின் சைத்தியமாக மாறும்பொழுது மனோமயப் புருஷன் ஈஸ்வரனாகிறான். அதுவே சத்தியஜீவன். அவதாரம் உயர்ந்த மனிதன். சத்தியஜீவன் மனிதனைக் கடந்த அடுத்த (species) நிலைக்குரிய பிறவி.**

☆ ☆ ☆

## 750) மனிதன் விழிப்பற்று இருப்பதால், அவன் முன்னேற்றமும் அப்படியேயிருக்கிறது. உள்மனம் பெறும் ஆன்மீக அனுபவங்களை மனிதன் அறியாமலிருப்பதுண்டு.

***விழிப்பற்ற மனிதனின் ஆன்மீக வளர்ச்சி.***

ஓர் ஊரில் உள்ள சந்தர்ப்பங்களை அனைவரும் அறிவதில்லை, பயன்பெறுவதில்லை. ஒரு குடும்பத்து வாய்ப்புகளை ஓரிருவர்தான் அறிந்து பலன் பெறுகிறார்கள். இன்று நாட்டில் வியாபாரம் பெருகுகிறது. T.V. பெருநகரங்களில் எல்லா வீடுகளிலும் உள்ளன எனப் பத்திரிக்கை கூறுகிறது. ஆனால் 30 கோடி பேர் வறுமையிலுள்ளனர். 50 ஆண்டுக்குமுன் வறுமை இருந்தது எனில் அன்று வாய்ப்பில்லை. இன்று 50 கோடி பேர் வறுமையைக் கடந்து வந்துள்ளனர். இந்த நிலையிலும் 30 கோடி பேருக்கு வாய்ப்பு கண்ணில் படவில்லை. அவர்கள் விழிப்பற்றுள்ளனர்.

இதே நிலையை பகவான் சுட்டிக்காட்டுகிறார். மனிதனுக்கு விழிப்பில்லை என்கிறார். பிரபஞ்சத்தின் உச்சியில் தெய்வங்களும், அடிமட்டத்தில் விலங்குகளும் உள்ளன. விலங்குகட்கு மனம் இல்லை. அதனால் உணர்வால் செயல்படுகின்றன. உணர்வுக்கு விழிப்பில்லை.

உணர்வுக்கு உணவும், உறக்கமும் தெரியும். விலங்கினம் மன நிறைவோடுள்ளது. உணவும், உறக்கமும் உள்ளவரை அதன் வாழ்வில் நிம்மதியுண்டு. அதற்குமேல் விலங்குக்கு நினைக்கத் தெரியாது. ஏனெனில் நினைக்கும் அறிவு அதற்கில்லை.

சிருஷ்டியின் உச்சியில் தெய்வங்கள் உறைகின்றன. தெய்வங்கள் பூமி அளவுள்ளன. அவர்களால் எதுவும் முடியும், முடியாததில்லை. நம்மைப் போன்ற ஸ்தூல உடல் அவர்கட்கில்லை. சைத்தியப் புருஷன் எனும் ஆன்மாவும் இல்லை. ஆனால் அவர்கள் சக்தி வாய்ந்தவர்கள். உலகம் அவர்கட்குக் கட்டுப்பட்டது. ஒளிமயமான விஷ்ணுவும், சக்தி வாய்ந்த சிவனும், உலகைப் படைத்த பிரம்மாவுக்கும் என்ன வேண்டும்? எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. இந்திரலோகத்தை அடைய நாம் கனவு காண்கிறோம். தவம் பலித்தால் இந்திர பதவியை நினைக்கலாம். இந்திரனுக்கு என்ன தேவை? மனிதன் செல்வத்தை நாடுகிறான். அதன் தெய்வமான லக்ஷ்மியைத் துதிக்கிறான். லக்ஷ்மிக்குச் செல்வம் தேவையா? சரஸ்வதிக்கு ஞானம் தேவையா? The Gods are satisfied with their splendours. உலகையே உற்பத்தி செய்து காத்து அழிக்கும் கடவுள்களுக்கு தங்கள் பிரபலம் திருப்தி அளிக்கிறது என்கிறார் பகவான். அவர்களுக்கும் முன்னேற்றமுண்டு. அதை அவர்கள் நாடுவதில்லை. நாடினால் முன்னேற்றத்தைப் பெற்றுத் தரும் சைத்தியப் புருஷன் தெய்வங்களிலில்லை. தெய்வலோகத்திலேயே இல்லை. அது பூவுலகில் மட்டுமேயுண்டு. அதை நாடினால் தெய்வம் மனிதப் பிறவி எடுக்கவேண்டும்.

பிரபஞ்சத்தின் அடித்தளம் இருள், ஜடமானது; சிகரம் ஜோதி, சச்சிதானந்தம். இருள் முழு இருளாக இருப்பதால் கண்ணுக்கு அது தெரியாது. ஜோதி ஜகஜ்ஜோதியாக இருப்பதால் கண் கூசும், அதைப் பார்க்க முடியாது. இவையிரண்டும் தனித்து, விலகியுள்ளன. ஜோதியே இருளாக மாறி, மீண்டும் தன்னைக் கண்டுகொள்ள முயல்வது



சிருஷ்டி என்கிறார் பகவான். அந்த இலட்சியம் பூர்த்தியாக, இருளுள் புதைந்துள்ள ஜோதி வெளிவந்து, எழுந்து, உயர்ந்து, மேலேபோய் ஜோதியுடன் கலக்கவேண்டும். இதுவே இறைவனின் சித்தம். அதை விலங்குகளால் அறிய முடியாது. தெய்வங்களுக்கு அறியும் ஆவலில்லை.

இறைவனின் சித்தம் சிருஷ்டியின் பரிணாமமாகப் பூர்த்தியாக வேண்டுமானால், அதற்குரிய கருவி மனிதன். ஏனெனில் அவனுக்கு உணர்வுடன், மனம் உண்டு. மனம் விழிப்படையக் கூடியது. மனம் விழித்தெழுந்தால் அவனுக்கு ஜோதி விளங்கும். தான் புதைந்துள்ள இருள் தெரியும். இருளிலிருந்து வெளிவர அவனால் முடியும். இருளையும், ஜோதியையும் இணைக்கும் பாலமாக மனிதன் அமைவான். இதைப் பூர்த்தி செய்ய அவதாரங்களால் முடியாது என இறைவனே உலகுக்கு வந்ததுதான் ஸ்ரீ அரவிந்தம்.

யோக வாழ்வு இக்குறிக்கோள் முன்னால் கடுகு. எனினும் யோக வாழ்வின் அடிப்படையும் இதுவே. யோகவாழ்வில் பிரபஞ்சத்தின் ஜோதியையும், இருளையும் இணைப்பதற்குப் பதிலாக நம்முள் உள்ள ஜோதியையும், இருளையும் இணைக்க முயல்கிறோம்.

மனிதனுக்கு விழிப்பில்லை unconscious. அவனது உள்மனம் inner mind விழிப்பாக இருக்கிறது. உள் மனம் வளர்வது அவன் மேல் மனத்தில் தெரியாது.

நஞ்சை நிலம், ஏரி, ஆறு, வாய்க்கால் உள்ள இடங்களை வளமான இடங்கள் எனப் பார்த்தவுடனே தெரியும். அளவுகடந்து பூமிக்கடியில் நீருள்ள பாலைவனத்தை எவரும் பாலைவனம் என்றே அறிவர். இந்தியாவில் விவசாய முன்னேற்றத்தில் தலைமையான மாநிலம் பஞ்சாப். அங்கு மழை 10". 10" மழை பெய்யுமிடம் பாலைவனம் என நிர்ணயிக்கப்படும். 5 நதிகள் ஓடுவதால் பஞ்சாப் விவசாயச் சிறப்புப் பெற்றது.

போர்ட் டிரஸ்ட் ஆபீசில் சீனிவாச ராமானுஜத்தின் மேதாவிலாசம் தெரியாததுபோல் உள்மனம் பெறும் சித்திகள், அனுபவங்கள், ஞானம் தமக்கே மனிதருக்குத் தெரிவதில்லை.

20 ஆண்டு சத்பிரேம் அன்னையுடன் Agenda அஜெண்டா எழுத உதவினார். ஸ்ரீ அரவிந்தர் சத்பிரேமின் ஆன்மீகச் சிறப்பை அன்னைக்குப் பலமுறை கூறியுள்ளார். அவை சத்பிரேம் அறிந்ததே. எனினும் தமக்கு 20 ஆண்டு ஆசிரம வாழ்வில் எந்தப் பலனும் தெரியவில்லை என அன்னையிடமே குறைப்பட்டுக்கொள்வார். அன்னையின் விளக்கங்கள் அவருக்கு முழு திருப்தி தரவில்லை. வாழ்விலுள்ள சில அனுபவங்கள்:

- பள்ளி, கல்லூரியில் எந்தச் சிறப்புமில்லாமலுமிருந்தவர் வாழ்வில் பெருஞ்சிறப்புப் பெறுவதுண்டு.
- எல்லா வகையிலும் சிறந்தவர் என்று இளம் வயதில் கண்டவர்கள் பின்னர் பேர், ஊர், தெரியாமல் போவதுண்டு.
- ஊர், பேர் தெரியாத கம்பெனி சில வருஷத்தில் நாட்டில் பிரபலமாவதுண்டு.
- 70 வயதுக்குமேல் எழுத்து, பேச்சு, பாட்டு, அரசியலில் திடீரென பிரபலம் அடைவதுண்டு. அது அரிது.

மனிதனுடைய திறமை, அறிவு, சாதனை ஆகியவை அவனுள் உருவாவது அவனுக்கும், மற்றவர்க்கும் தெரியாமலிருப்பதற்குக் காரணம் மேல்மனம், உள்மனத்தினின்று பிரிந்திருப்பதால்தான். ஒருவரை நாம் அறியவேண்டுமானாலும், அவரே அறிய வேண்டுமானாலும், சூட்சும அனுபவமுள்ளவர், சூட்சும அறிகுறிகளைக் கவனித்தால் புரிந்துகொள்ள முடியும். ஆசிரம வாயிலில் தம் பிறந்த நாளன்று ஒரு பக்தர் தற்செயலாய் சந்தித்த வெளிநாட்டாரை பகவான் அறைக்கு அழைத்துப் போனார். அச்சமயம்



நல்ல மழை. வந்தவர் பக்தருடன் நிரந்தரமாகத் தங்கியதை அருளான மழையும், பகவான் அறையும், பிறந்தநாளும் குறிக்கின்றன. வயதானபின் நாம் வெற்றி பெற்ற விஷயங்களின் ஆரம்பத்தை நினைவுகூர்ந்தால் சூட்சும அறிகுறிகள் என்ன என அறியலாம்.

☆ ☆ ☆

*தொடரும்....*

## ஜீவிய மணி

ஆர்ப்பாட்டத்திலும் ஆனந்தம் அழகை வெளிப்படுத்தும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் தன்னைக் கொண்டு உலகத்தை அறிய முயல்கிறான். அது சுயநலத்தால் வரும் அறிவு. விலக்கான மனிதர்களும், விலக்கான நேரங்களிலும் தவிர, மனிதன், நான் சரி, மற்றவர்கள் தவறு என்ற கண்ணோட்டத்தையே மேற்கொள்கிறான்.

*மனிதனுக்கு அவன் எப்பொழுதும் சரி.*

## XI. Delight of Existence : The problem

*Page No. 95*
*Para No. 9*

The moral difficulty is unanswerable.
Anyway, in this form, it is unanswerable.
Now half that difficulty disappears.
It no longer arises.
It can no longer be put.
There are two aspects to cruelty or the creation of cruelty.
One is cruelty to others while He is immune.
Maybe He is participating in their suffering.
I am the sole existence or He.
Self-infliction of suffering is another question.
All-Delight is necessarily all-good and all-love.
How can evil and suffering exist in Sachchidananda?
God is not a mechanical existence.
God is a free, conscious being.
He is free to condemn evil and suffering.
He is free to reject them.
The issue is a false issue.
It is false by the way it was stated.
It applies to partial terms.
We present it as if it were applicable to the whole.



## 11. ஆனந்தம் - கேள்வி

தர்மசங்கடமான இக்கேள்விக்குப் பதிலில்லை.
இந்தக் கேள்வியை எழுப்பினால் பதில் கூற முடியாது.
கடவுள் ஆனந்தமயமானவர் எனில் பாதி சிரமம் கரைகிறது.
இனி கேள்வி எழுப்ப முடியாது.
அதை இனிக் கேட்க முடியாது.
கொடுமைக்கு இரு அம்சங்களுண்டு.
தனக்குப் பாதிப்பில்லை என்றபொழுது அடுத்தவர் படும் கொடுமை ஒரு கேள்வி.
அடுத்தவர் கொடுமை அவனையும் பாதிக்கும்.
அவன் ஏகன், அவன் தவிர உலகில் எதுவுமில்லை.
தானே தனக்குக் கொடுமையை இழைக்கிறானா என்பது அடுத்த கேள்வி.
ஆனந்தம் அன்பு, நன்மை.
சச்சிதானந்தத்தில் கொடுமையும் துன்பமும் எது?
கடவுள் இயந்திரமில்லை.
கடவுள் சுதந்திரமானவர், தன்னையறிந்தவர்.
கடவுள் கொடுமையைக் கண்டிக்கலாம்.
அவரால் கொடுமையை மறுக்க முடியும்.
பிரச்சினையே தவறான பிரச்சினை.
அதை நாம் சொல்லும் பாணி அதைத் தவறாக்குகிறது.
பிரச்சினை பகுதியைக் காண்கிறது.
நாம் அது முழுமைக்குப் பொருந்தும் என நினைக்கிறோம்.

The idea of good is a partial concept.
It springs from a dualistic conception.
Also, it is a divisional conception.
It is based on relations based on creature and creature.
All-Delight starts from One who is all.
We persist in our folly.
The original purity is unity in division.
We must examine how it starts.
The idea of love too is a partial concept.
Original understanding is a safe course.
Parts and their development are based on division and duality.

We do not live in an ethical world. *Page No. 96*
We have to recognise it. *Para No. 10*
Our view is the view of the whole.
We are not limited to human difficulty.
Ours is not a human standpoint.
Man is ethical.
He sees an ethical meaning in the whole of nature.
He forces it on Nature.
It is a wilful, obstinate self-confusion.
It is a pathetic attempt.
Man reads himself into all things.
His is a limited human self.
His standpoint is personal.
He has evolved it for himself.



நன்மை என்பது பகுதி.
நன்மை என்பது தீமையின் எதிரான இரட்டை.
பிரிப்பதனால் எழுவது நன்மை, தீமை.
இருவர் தொடர்பு கொள்வதால் ஏற்படும் உறவு நன்மை.
ஆனந்தம் பரமாத்மாவுக்குரியது.
நம் தவற்றை நாம் வலியுறுத்துகிறோம்.
தூய்மை என்பது பிரிவினையில் ஐக்கியம்.
இது எங்கு ஆரம்பமாயிற்று எனக் காண வேண்டும்.
அன்பும் இது போன்றதே.
ஆரம்பத்தைக் கருதுவது நல்லது.
பகுதியும், அதன் வளர்ச்சியும் பிரிவினைக்குரியவை.

நாம் தர்ம நியாய உலகில் வாழவில்லை.
நாம் அதை உணர வேண்டும்.
நம் பார்வை முழுமையானது.
மனிதப் பிரச்சினை நம்மைக் கட்டுப்படுத்தாது.
நம் கண்ணோட்டம் மனிதக் கண்ணோட்டம்.
மனிதன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன்.
இயற்கை தார்மீகமானது என நினைக்கிறான்.
தன் கருத்தை இயற்கை மீது திணிக்கிறான்.
இது குழப்பம் விளைவிக்கும் பிடிவாதம்.
இது பரிதாபமானது.
எதையும் மனிதன் தன் கண்ணோட்டத்தில் பார்க்கிறான்.
மனிதனின் வாழ்வு சிறியது.
அவன் கண்ணோட்டம் தனிப்பட்டது.
இதை அவனே தனக்கு ஏற்படுத்திக் கொண்டான்.

**Man judges everything from this point of view.**
**It prevents the complete knowledge.**
**Even his sight is blessed.**
**Material Nature is not ethical.**
**Nature is governed by a law.**
**It coordinates fixed habits.**
**It takes not cognisance of good and evil.**
**It takes cognisance of the force only.**
**The force creates.**
**It is the force that arranges and preserves.**
**Again it is the force that disturbs.**
**It destroys impartially and non-ethically.**
**It does so according to the secret will in it.**
**The will has mute satisfactions.**
**Its self-formation and self-dissolutions are mute too.**
**Animal nature is vital Nature.**
**It too is non-ethical.**
**As it progresses it manifests a material.**
**It is crude.**
**Out of it the ethical impulse evolves.**
**The higher animal does it.**
**The tiger slays its prey.**
**It devours it.**
**We do not blame the tiger with cruelty.**
**The storm destroys.**
**The fire tortures and kills.**



**எதையும் மனிதன் தன் பார்வையில் கணிக்கிறான்.**
**இது முழு அறிவைத் தடுக்கும்.**
**அவன் பார்வை குறையானது.**
**ஜடமான இயற்கைக்கு தர்மமில்லை.**
**இயற்கைக்குரிய சட்டம் உண்டு.**
**நிலையான பழக்கங்களால் இயற்கை செயல்படுகிறது.**
**அது நல்லது, கெட்டதைக் கருதாது.**
**இயற்கைக்கு சக்தி மட்டும் முக்கியம்.**
**சக்தி சிருஷ்டிக்கின்றது.**
**சக்தியின் ஏற்பாடு நம் நிலையைக் காக்கப் பயன்படுகிறது.**
**சக்தியே இருப்பதைக் கலைப்பது.**
**சக்திக்கு அழிப்பதில் பாரபட்சமில்லை. அதற்கு தர்மமில்லை.**
**அதனுள் உள்ள ஆண்டவன் திருவுள்ளப்படி சக்தி செயல்படும்.**
**திருவுள்ளம் விரக்தியாகத் திருப்திப்படும்.**
**ரூபமும், அழிவும் சக்திக்கு விரக்தியானவை.**
**விலங்கின் இயற்கை உணர்வுமயமானது.**
**அதற்குத் தர்மமில்லை.**
**விலங்கு செயல்படும்பொழுது ஒரு சக்தி வெளிப்படுகிறது.**
**அது சுத்தமானதன்று.**
**அதிலிருந்து தர்மம் உதயமாகிறது.**
**தர்மத்தை விலங்கைவிட உயர்ந்த உணர்வு எழுப்புகிறது.**
**புலி மற்ற மிருகங்களைக் கொல்கிறது.**
**கொன்றதைத் தின்றது.**
**புலி கொடுமை செய்கிறது என நாம் கூறுவதில்லை.**
**புயல் அழிக்கிறது.**
**நெருப்பு கொலை செய்கிறது, சித்ரவதை செய்கிறது.**

**Nor do we blame it.**
**There is a conscious-force in the storm, fire and tiger.**
**That too does not blame them.**
**Ethics begins with blame and condemnation.**
**It starts with self-blame and self-condemnation.**
**We blame others according to a law.**
**We do not apply the law to ourselves.**
**That is not true ethics.**
**It is only to use the language of ethics.**
**Ethics has evolved this language for us.**
**We recoil from what hurts us.**
**What displeases us makes us recoil.**
**It is an emotional impulse of dislike.**
**Then we use that language of ethics.**

***Contd...***

☆ ☆ ☆



**அவற்றையும் நாம் குறை சொல்வதில்லை.**
**புலி, நெருப்பு, புயலில் ஓர் ஆன்மீக சக்தியுண்டு.**
**அந்த ஆன்மீக சக்தியையும் குறை சொல்வதில்லை.**
**குறை கூறுவதும், திட்டுவதும் தர்மத்தின் ஆரம்பம்.**
**தம்மீது குறை கூறுவதும், தன்னையே திட்டுவதும் தர்மம் ஆரம்பமாவது.**
**பிறரை ஓர் நியாயப்படி திட்டுகிறோம்.**
**அந்த நியாயத்தை நமக்கே நாம் கருதுவதில்லை.**
**இது உண்மையான தர்மமில்லை.**
**இது தர்மத்தின் சொற்களைப் பயன்படுத்துவதாகும்.**
**தர்மம் நமக்குத் தந்த மொழியிது.**
**நம்மைப் புண்படுத்துவதிலிருந்து நாம் விலகுகிறோம்.**
**எது பிடிக்கவில்லையோ அதிலிருந்து விலகுகிறோம்.**
**அது வெறுப்புணர்ச்சி.**
**அதற்குப் பதிலாக நாம் நியாயம் பேசுகிறோம்.**

*தொடரும்...*

☆ ☆ ☆

# இம்மாதச் செய்தி

லட்சியமும் சுபாவமும்
ஒத்துப் போவது அதிர்ஷ்டம்.

**The Idealist tries to train his nature's urge along the lines of his aims.**





**Age does not matter because advantages and disadvantages balance.**

**வயதாகிவிட்டது என்பது குறையல்ல. குறைக்குரிய நிறைவுண்டு.**

- **சிறு வயதில் படிக்க முடியவில்லை. இனி எனக்குப் படிப்பில்லை.**
- **நான் சம்பளத்திற்கு வேலை செய்தேன். எனக்குச் செல்வம் வர வழியில்லை.**
- **படிப்பும், திருமணமும், பணமும் பெற உரிய காலம் உண்டு என்று தமிழ்நாட்டு வழக்குக் கூறுகிறது.**

எதையும் காலத்தில் பெற வேண்டும். பெற்றாலும் காலம் கடந்தால் பயனில்லை என்பது மரபு. அன்னை அதற்கு எதிராகப் பேசுகிறார்கள். அன்பர்கள், "அன்னையை அன்றே தெரியாமற் போய்விட்டது" எனக் குறைப்படுவதுண்டு. இது உண்மையில்லை.

**என்று கண் திறந்தாலும் எல்லாம் சேர்ந்துவரும் என்பது அன்னை.**

ஓய்வு பெற்ற பிறகு சர்வீஸ் முழுவதிலும் பெறாத பிரபலம், சௌகரியம், வருமானம் பெற்ற அன்பர்கள் தங்கள் அனுபவத்தில் இதைக் கண்டுள்ளனர். Synthesis of Yoga என்ற நூலில் பகவான்,

"கடந்த நாட்களில் இடறி விழுந்ததின் முக்கியத்துவம் இன்று தெரியும். நாம் இதைவிட வேகமாக முன்னேறியிருக்க முடியாது என்பது இப்பொழுது புரியும்"

என்று எழுதுகிறார்.

இளம் வயதில் மனம், ஆன்மா விழிப்பாக இருப்பதால் வேகமாக முன்னேறலாம் என்பது உண்மை. வயதான பின் அனுபவம் அதிகமாக இருப்பதால் அதே அளவு முன்னேறலாம் என்பதும் உண்மை என்பதால் ஒரு வழியாக ஏற்பட்ட குறை அடுத்த முறையில் நிறைவாவதால், காலம் பொருட்டன்று என்பது அன்னையின் விளக்கம்.

40 வயதானவர் பட்டம் பெறவில்லை எனில், இன்று பட்டம் பெற்றால் 20 ஆண்டு சர்வீஸ் விரயமாகிவிட்டது என்ற குறையில்லாமல் இன்றுள்ள அனுபவத்திற்காகவும், அன்னையின் சூழலுக்காகவும், கிடைக்கும் பெரிய உத்தியோகம் மேற்சொன்ன கருத்தின் உண்மையை எடுத்துக்காட்டும்.

- ✫ வருமானத்தில் இவ்வுண்மையை எளிதாகக் காணலாம்.
- ✫ படிப்பால் பெறும் பலனிலும் நடைமுறையில் காணலாம்.
- ✫ ஆன்மாவுக்கு வயதில்லை என்பதாலும், அனந்தமானது என்பதாலும், விழிப்பு என்று ஏற்பட்டவுடன் அனந்தமான ஆன்மீகப் பலன் பெறுவதால் நஷ்டம் என்பதில்லை என்று காணலாம்.
- ✫ நஷ்டம் நம் வாழ்வுக்குரியது. அன்னை வாழ்வில் நஷ்டம் அதிர்ஷ்டமாகும்.

✫ ✫ ✫



## அன்பரும் - நண்பரும்

நம் நாட்டில் தபாலில் புத்தகம், பரிசு அனுப்பினால் நிச்சயமாகப் போகும் என்று சொல்ல முடியாது. நிச்சயமாகப் போக வேண்டுமானால், ரிஜிஸ்டர் செய்து அனுப்ப வேண்டும். விலையுர்ந்த பொருள்கள் போக இன்ஷுர் செய்யும் முறையுண்டு. **வெளிநாடுகளில் சாதாரண தபாலில் போகும் பொருள்கள், நம் நாட்டில் இன்ஷுர், ரிஜிஸ்டர்போல தவறாது போய்ச் சேரும்.**

நம் நாட்டில் வசிக்கும் வெளிநாட்டுப் பெண் இலண்டனிலிருந்து 3 வீடியோ கேசட்டுகள் ஆர்டர் செய்திருந்தார். 2 வந்தன. மூன்றாவது பார்சலில் இல்லை. யாரையும் கேட்க முடியவில்லை. Amazon கம்பனி மூலம் ஆர்டர் செய்தால் வெளிநாட்டிலிருந்து courier மூலம் வருகிறது. அங்குப் பொருள்கள் தவறுவதில்லை. எப்படி எனத் தெரியவில்லை. அந்தத் தபால் கஸ்டம் மூலம் வரி கட்டி வரும். ஆர்டர் செய்தவருக்கு வரி கட்ட அபிப்பிராயமில்லை. தவறாவதும் சம்மதமில்லை. இதன் விளைவாக அவர் புது கேசட்டுகள் ஆர்டர் செய்வதையே நிறுத்திவிட்டார். நிறுத்திய பின்னும் மனம் நிதானப்படவில்லை. அடுத்தமுறை ஒரு கேசட் ஆர்டர் செய்தார். கேசட் பத்திரமாக வந்து சேர்ந்தது. வரி 100% கட்டினார். மனம் துணுக்குற்றது. பல நாள் மனம் குழப்பம், கவலை, போராட்டம், எரிச்சல்பட்டு அடங்கியபின், 3 கேசட் வெளிநாட்டு கொரியர் மூலம் அமேஜான் கம்பனியில் ஆர்டர் கொடுத்தார். **குறித்த நேரத்தில் பத்திரமாக எல்லாக் கேசட்டுகளும் வரியில்லாமல் வந்து சேர்ந்தன.** சர்க்காரில் பல சட்டங்கள் இருக்கின்றன. எந்தச் சட்டத்தின் கீழ் வரியுண்டு, எதன்படி வரியில்லை என இவரால் விவரமாக அறிய முடியவில்லை. தெரிந்தவர்களை விசாரித்தார். வந்த பதில்கள் பலவாறு, முன்பின் முரணாகவுமிருந்தன.

1. சமீபத்தில் வரி ரத்து செய்யப்பட்டது என்பது ஒரு பதில்.

2. ஆர்டர் ஒரு ஸ்தாபனத்தின் பேரில் போட்டால் வரியில்லை.

3. வரி ஸ்தாபனத்திற்கு, தனி நபருக்கில்லை.

4. வெளிநாட்டிலிருந்து அனுப்புவது கம்பனியானால் வரியுண்டு.

5. அனுப்புபவர் தனி நபரானால் வரியில்லை.

6. R² STo gift பரிசாக அனுப்பினால் வரியில்லை.

இந்தச் சட்டங்களில் எது உண்மை என்று தெரிந்துகொள்ளும் வசதி இப்பெண்ணுக்கில்லை. இவருக்கு நஷ்டப்படவோ, வரி கட்டவோ, அன்னையை நம்பவோ மனம் இல்லை. விவரம் தெரியாததால் குழப்பமான மனநிலை. தெளிவாகச் செயல்பட முடியவில்லை. ஓரளவு மனம் அடங்கியது உண்மை. வரியில்லாமல் வந்ததும் உண்மை. இதன் நடுவில் நண்பர் ஒருவர் இந்தியா வருவதாகவும், அன்பருக்கு எந்தக் கேசட்டுகள் வேண்டும் எனவும் கேட்டிருந்தார். அவர் வரும்பொழுது 40 கேசட்டுகள் கொண்டு வந்தார். அவற்றிற்கு வரியில்லை, தபால் செலவில்லை. கேசட்டுகளை நண்பர் பரிசாகக் கொடுத்ததால் விலையுமில்லை.

- **அதன் பிறகு ஒரு வருஷத்திற்கு மேலாக இப்பெண் கேசட் ஆர்டர் செய்கிறார். அவை தொலைவதில்லை. வரி கட்டுவதில்லை.**
- **மனம் அன்னையை ஏற்று, அன்னைக்குச் சரணடைந்து, அன்னையை நம்பிச் செயல்படும்பொழுது இதுபோல் காரியம் நடக்கும். இவர் அலுத்து, சலித்து, வெறுத்து ஒதுக்கியதால், மனம் பிரச்சினையிலிருந்து விலகியது unconscious surrender தெளிவில்லாத சரணாகதியாயிற்று. அதன் பலன் மேற்சொன்னது.**

☆ ☆ ☆





## சரணாகதி சமாதியைக் கடந்தது

*(ஜனவரி 2003 இதழின் தொடர்ச்சி....)*

*(ஆகஸ்ட் 15, 2002 அன்று இராணிப்பேட்டை தியான மையத்தில் திருமதி வசந்தா லக்ஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை)*

சமர்ப்பணத்தில் கடைசி கட்டம்வரை வெற்றிகரமாக வந்த ஒருவர் கடைசி கட்ட உந்துதலைக் காண்பார் (subtle physical impulse). இதைக் காணும் போது மனத்திலிருந்து வெகு தூரத்தில் காண்பதால் நாம் இதை அலட்சியப்படுத்துவது உண்டு. இந்தப் impulse பார்வைக்கு லேசாகத் தெரியும். இதன் வலிமை முழுமையானது; எளிதில் சமர்ப்பணமாகாது. முதல்கட்ட சமர்ப்பணத்திற்குச் சமம். இதைச் சமர்ப்பணம் செய்ய முடியுமானால் அதுவே வீண் பெருமையின் முடிவு. வெகுதூரத்தில் உள்ளவருக்கு ஆள் மூலம் செய்தி அனுப்புவதை மாற்றி phoneஇல் பேசுவது போன்றது இந்தச் சமர்ப்பணம்.

### சமர்ப்பணத்திற்குத் தேவையான தியானம் :

ஸ்ரீ அரவிந்தர் இதை all inclusive concentration என்கிறார். அது ஜீவனுடைய நிஷ்டையாகும். அதன் மையங்கள் இரண்டு. ஒன்று தலைக்கு மேல். இரண்டு நெஞ்சிற்கு பின்னால். நாம் செய்யும் தியானத்திற்கு மனம், நெஞ்சு, உடல் மையங்களாம். இவை ஒரு கரணத்தினுடைய நிஷ்டை. மூன்று கரணங்களிலும் நிஷ்டை ஒரே சமயத்தில் எழுந்தால் மையம் நகர்ந்து நெஞ்சிற்குப் பின்னால் போகும். இதுவே ஸ்ரீ அரவிந்தருடைய இரகசியம். அவர் அதைப் பகிரங்கமாக வெளியிட்டார். இந்த முறையை ஏராளமான சிறு

பகுதிகளாகப் பிரித்து (முன் பக்கங்களில் எழுத முடியாத காரியத்தை முடிக்க முயன்றேன்). சொற்பொழிவின் ஆரம்பத்தில் கூறினேன். இது முடியாத காரியத்தை முடிக்க உதவும். நெஞ்சிற்குப் பின்னால் நிஷ்டை என்றால் என்ன? ஆண்டவனின் மீது பக்தி ஏற்பட்டால் நெஞ்சம் மலர்ந்து பக்திப் பரவசமாகி லயத்தில் முடியும். அது நெஞ்சுக்குரிய நிஷ்டை. மனத்தில் நிஷ்டை என்றால் மனம் புலன்களிலிருந்து பிரிந்து மனத்துள் புகுந்து மனத்தின் ஆதியான ஆத்மாவை விடுதலை செய்யும். உடலின் நிஷ்டை என்பது குந்தளினியை விடுதலை செய்யும். நெஞ்சுக்குப் பின்னால் நிஷ்டை என்றால் அது இவற்றின் எதுவுமாகாது. மனத்தில் நுழையும் எண்ணம் எண்ணமன்று. அது மனத்தின் அசைவு. மனம் என்பது மனமன்று. மனோமயப் புருஷனின் செயல். மனோமயப் புருஷன் மனோமயப் புருஷனல்லன், ஆத்மாவின் பகுதி. ஆத்மா என்பது ஜீவாத்மாவன்று. அதன் பிரகிருதியான சைத்தியப் புருஷன் என நாம் உணரும்பொழுது மனத்தில் சைத்தியப் புருஷன் விழித்துக் கொள்ளும். நாம் பழகும் மனிதர்களுடன் ஏற்படும் பாசம் பாசமன்று, உணர்ச்சி. அது உணர்ச்சியன்று, உயிர். உயிரன்று பிராணமயப் புருஷன், பிராணமயப் புருஷனல்லன்; பிராணனின் சைத்தியப் புருஷன் என்று தெரியும்பொழுது மனத்தின் சைத்தியப் புருஷனும், பிராணனின் சைத்தியப் புருஷனும், மனத்தையும், நெஞ்சையும் விட்டு அகன்று நெஞ்சுக்குப் பின்னால் இணைவார்கள். அங்குத் தியானம் ஏற்பட்டால் உடலின் சைத்தியப் புருஷனும் அதனுடன் புலன்கள் உள்ளது என்பதால் புலன்களால் பாதிக்கப்படாது. எனவே புலன்கள் அவிக்கப்பட வேண்டியவையல்ல. இந்தத் தியானம் பலித்தால் அங்கு இறைவன் தெரிவான். புறத்திலும் இறைவன் தெரிவான். புறத்தில்



உள்ளது பிரபஞ்சத்தின் ஆத்மா. அகத்திலுள்ளது ஜீவாத்மா. நிஷ்டை உயர்ந்தால் தலைக்குமேல் இறைவன் தெரிவான். அது பரமாத்மா. இந்த மூன்று தரிசனங்களும் சேர்ந்து பூரண யோகத்தின் முதல் சித்தியாகும். அதுவே அதனுடைய அடிப்படையான சித்தியாகும்.

ஆண்டவனை உணர்வால் ஏற்பதும் ஆன்மீக ஞானத்தால் அறிவதும் ஜீவ நிஷ்டைக்குத் தேவையானவை. அந்த அறிவிற்கு Life Divine புரியும். அது மனத்தை விசாலப்படுத்தும். தியானத்தில் தலையே பெரியதாவதைப்போல் தோன்றும். அன்னையைத் தரிசனத்தில் கண்டபோதும், சமாதி தரிசனம் செய்தபோதும் நெஞ்சை உயர்ந்த ஜீவியம் நிரப்பும். உயர்ந்து உணர்வு எழுந்து பூரிக்கும் க்ஷணம் என்றாலும் இது முழுமையான அனுபவம். பூரண யோக ஆன்மீக அனுபவம் ரிஷிகள் அறியாதது.

எவ்வளவு பெரிய அனுபவமானாலும் அது அனுபவம், சித்தியன்று. அனுபவம் வந்து போவது, சித்தி நிலையாக இருப்பது.

குல்சாரிலால் நந்தா என்பவர் பழம்பெரும் காந்தியவாதி, பிரம்மச்சாரி. சர்வப்பரித்தியாகம் செய்து தேசிய இயக்கத்தில் சேர்ந்தவர். சுதந்திரத்திற்கு முன் தொழிற்சங்கத்தில் வேலை செய்தவர். அகில இந்திய தேசியத் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக இருந்தவர். ஆசை என்பதை அறியாதவர், கட்சிக்குள் கட்சி சேர்க்காதவர். 1947 முதல் மத்திய மந்திரி சபையில் இடம் வகித்தவர். நேரு காலமானபோது மந்திரி சபையில் இரண்டாம் பதவி வகித்தவர். நேரு இறந்தவுடன் அவரைத் தற்காலிகப் பிரதமராக்கினார்கள். இவருக்கு அடுத்த மூன்றாம் பதவியில் இருந்த மொரார்ஜி தேசாய் தானே பிரதமராக வரவேண்டும் என்று அறிவித்த பிறகு தனக்கு

அந்தப் பதவி வேண்டும் என்று கேட்காதவர். மொரார்ஜியைக் கடந்து நான்காம் இடத்தில் இருந்த சாஸ்திரியைப் பிரதமராகத் தேர்வு செய்த பொழுதும் தனக்கு அந்தப் பதவி வேண்டும் என்று அவர் கேட்கவில்லை. 1½ ஆண்டுகள் கழித்து சாஸ்திரிக்குப் பிறகு மீண்டும் பிரதமர் பதவி காலியானபோது மொரார்ஜி போட்டி இடுவேன் என்று அறிவித்தார். நான்காவது ஸ்தானத்தில் இருந்த இந்திரா போட்டி இட்டார். போட்டி நடக்கும் பொழுது முன்போலவே நந்தா தற்காலிகப் பிரதமராக இருந்தார். அவர் பதவியை நாடவில்லை. ஜனாதிபதியாக இருந்த சஞ்சீவரெட்டி  இவரைப் போன்ற பழம்பெரும் காந்தியவாதி. ஆனால் மாமிசம் சாப்பிடுவார். புகை பிடிப்பார். சென்னைக்கு அவர் ஜனாதிபதியாக வந்தபோது அங்கு கவர்னராக இருந்த காந்தியவாதி தனக்கு மாமிச உணவு கொடுக்கவில்லை, சிகரெட் வாங்கி வைக்கவில்லை என்று அவரை டிஸ்மிஸ் செய்தார். நந்தாவிற்கு அதுபோன்று பழிவாங்கும் மனப்பான்மையில்லை. அரசியல் நிலைமை மாறியது. நந்தாவிற்கு மந்திரி பதவியில்லை. M.P.ஆக இருந்தார். M.P.ஆக இருந்த போது அவருக்கு M.P.-க்குக் கொடுக்கும் சம்பளம் ரூபாய் 450/-. பிறகு M.P. பதவி போய்விட்டது. அப்பொழுது அகமதாபாத்தில் ஒரு வீட்டில் குடியிருந்தார். வயதாகிவிட்டதால் M.P. பதவியுமில்லை. M.P.க்குரிய பென்ஷனுண்டு. அவருக்கு 97 வயது இருக்கும்போது டெல்லிக்குப் போயிருந்தார். அப்பொழுது வாடகை 1½ ஆண்டு கொடுக்க முடியவில்லை. வீட்டுக்காரர் வீட்டிலுள்ள சாமான்களைத் தெருவில் எடுத்துப் போட்டுவிட்டார். பெற்ற பதவி பெரியது. கொடுக்க வேண்டிய வாடகை சிறியது. வந்து போகும் பதவிகள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், வகித்த பதவிகள் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், எவ்வளவு நாள் பதவியில்



இருந்திருந்தாலும் பதவி போன பிறகு அந்தச் சிறிய வாடகை கொடுக்கும் சக்தி பதவிக்கில்லை. அதற்குச் சொந்த வருமானம் தேவை. பதவி அனுபவம் போன்றது. சித்தி சொத்து போன்றது. அன்னை நமக்குத் தரும் அனுபவத்தைச் சித்தியாக மாற்றிக் கொள்வது நம் கடமை.

**முற்றும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தம்மைப் போன்ற ஒருவரை, தம் உணர்வு பூரித்து ஏற்றுக் கொண்டால், பார்வைக்குப் பவித்திரமாகத் தென்பட்டால் அருகிலிருந்து சேவை செய்ய முடியுமானால் மனம் பாராட்டித் துதிக்கும்.

*பார்வைக்கு பவித்திரமான நம்மவர் நமக்கு நடமாடும் தெய்வம்.*

## அன்பர் கடிதம்

ஸ்ரீ அரவிந்த அன்னையின் மலர்ப் பாதங்களுக்குக் கோடானு கோடி நன்றியைச் சமர்ப்பணமாக்குகிறேன்.

இக்கடிதத்தை அன்னையின் அருளால் எழுதுவதாக நினைக்கின்றேன். நான், அம்மா, அண்ணன் மூவரும் அன்னையின் அருளால் வாழ்கின்றோம். என் அண்ணன் ஒரு cricket player. கடந்த மாதம் அவர் Punjabக்கு விளையாடச் சென்றார். விளையாடும்பொழுது கால் முட்டியில் காலில் அடிப்பட்டு வீங்கி விட்டதாகவும் காலை மடக்கி உட்கார முடியவில்லை என்றும் STDயில் கூறினார். நான் அவருக்கு அன்னையின் மலர்களை (blessing packet) கொண்டு செல்லுமாறு கூறியதால் அவரும் ஏற்கனவே கொண்டு சென்றார். என்னை STDயில் தொடர்பு கொண்டு அவருடைய அடியைப் பற்றிக் கூறிய பொழுது அன்னையின் blessing packetஐ முட்டியில் வைத்து அன்னைக்கு prayer பண்ணச் சொன்னேன். Fever வந்துள்ளதாகவும் கூறினார். அன்னை அவர் உடலை வருடிக் கொடுப்பதாகக் கற்பனை பண்ணிக் கொள்ளச் சொன்னேன். அவரும் அவ்வாறே செய்ததாகவும் தம் கால் வலியும், feverஉம் மறுநாளே சரி ஆனதாகவும் அன்று மேட்ச் நன்றாக ஆடி win செய்து கொடுத்ததாகவும் மறு நாள் STDயில் கூறிய பொழுது நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நான், என் அம்மா உடனே அன்னைக்கு நன்றி கூறினோம். எங்கள் வாழ்வில் ஒவ்வொரு தருணத்திலும் அன்னையின் அருளைப் பெறுகின்றோம். அன்னையின் கோட்பாடுகளையும், அவருடைய அருளைப் பெறச் செய்ய வேண்டிய முறைகளையும் தங்கள் புத்தகத்தின் வாயிலாக அறிந்து கொள்ள உதவிய அன்னைக்கு



நாங்கள் மூவரும் நன்றியைச் செலுத்துகிறோம். எங்கள் வாழ்வை மேன்மேலும் அன்னை உயர்த்துவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு பரிபூர்ணமாக உள்ளது. எங்களை ஒவ்வொரு fraction of second காத்திடும் அன்னையின் மலர்ப் பாதங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

நன்றி.

✯ ✯ ✯

### ஸ்ரீ அரவிந்த சுடர்

“உலகமே என்னுள்ளிருக்கும்பொழுது தனிமை ஏது?” என்றார் பகவான். உடல் தனித்திருக்கலாம். ஜீவன் எப்பொழுதும் தனித்தில்லை. தனிமை ஆன்மீக நெருக்கத்தை அதிகப்படுத்தும்.

### அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎**

**இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பணம் என்பது நம்பிக்கை. நம்பிக்கை என்றால் என்ன? தெரிந்ததை நம்புவது அனுபவம். நம் நம்பிக்கை என்பது அதன்று. கொலம்பஸ் எதையோ ஒன்றை நம்பி அதை நாடினான். அதுவரை எவரும் காணாதது அது. தெரியாததை அறிவால் புரிந்து நம்புவது நம்பிக்கை. அதற்குத் தேவையானது சூட்சும ஞானம்.

**நம்பிக்கை சூட்சும ஞானம்.**

செக்கை மறுக்கும் கிராமத்தானுக்குப் பணத்தைப் பற்றிய ஞானமில்லை. செக்கை ஏற்கும் நகரவாசி பணமிருந்தால் நல்லது என்பதும் செக் என்பது பணம் என்றும் சூட்சுமமாகப் புரியவில்லை. ஒரு முக்கிய விஷயம் பேச போனில் பேசுவதைவிட நேரில் பேசலாம் என்பது போன் என்பதை முழுவதும் அறியாதவர் செய்வதாகும். எந்த டாக்டருக்கு கைராசி என்று கேட்பவனுடைய நம்பிக்கை சரி. அது மூடநம்பிக்கை. ஹாலண்டில் பணத்தை வீட்டினுள் உள்ள குப்பைத் தொட்டியின் அடியில் வைப்பார்கள், சாவியைத் தலையணையின் கீழ் வைப்பதைப்போல். திருடன் பணத்தை பெட்டியில் தேடுவான். குப்பைத் தொட்டியில் தேடமாட்டான் என்பது கருத்து. 21ஆம் நூற்றாண்டு பிறந்த பின் ஹாலண்டில் பணத்தை பாங்கில் போடாமல் குப்பைத் தொட்டியில் வைப்பது மூடநம்பிக்கை. குப்பைத் தொட்டியில் ஒளிந்துள்ள பணம் திருடு போகாது என்றாலும் இவை மூடநம்பிக்கை மூலம் ஏற்பட்ட சூட்சும ஞானம். கைராசியை நம்பாத படித்த மனிதன் பெரிய பட்டம் பெற்ற டாக்டரிடம் போவது சூட்சும ஞானமில்லாதது.



நாம் கட்டுப்பட்டி, இக்காலத்து புதிய மனிதர் என்பவர் யார்? இவற்றுள் இருபக்கமும் உண்டு. புதியதை ஏற்பது முன்னேற்றம். புதியது, பேஷன் என்பதற்காக ஏற்பது சரியில்லை. கடந்தது கைவிடப்பட வேண்டும் என்றாலும் கடந்ததில் நல்லவை, உயர்ந்தவை கைவிடப்படக் கூடாது. நல்லதன்று என்று தெரிந்தும் விட முடியாதது மூடநம்பிக்கை. மனம், உணர்வு, உடல் மூன்றும் இத்தகையன. "இது சரி என நான் அறிவேன். நான் நினைப்பது தவறு. என்னால் மாற முடியவில்லை" என்று கூறினால் பகுத்தறிவை ஏற்க முடியவில்லை என்று தெரிகிறது. இது மனத்தின் குறை. "தியானத்திற்கும், ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்கும் எந்தத் தொடர்புமில்லை என நான் அறிவேன். தரிசனத்தன்று ஆழ்ந்த தியானம் கலைந்த பின், ஐஸ்கிரீம் சாப்பிட மனம் ஒப்பவில்லை". தன்னால் மாற முடியவில்லை, மாறாமலிருப்பது நல்லது என்ற மனப்பான்மையிது. இது உயர்ந்த நம்பிக்கையில்லை. மூடநம்பிக்கை எனவும் கூறலாம். அடுத்த நிலையிலுள்ளவர் பேசுவதில்லை. அவரிஷ்டப்படி நடப்பார்கள். புத்தூரில் எலும்பு கட்டுகிறார்கள். அது பெயர் போன இடம். நான் அங்கே போகிறேன் என்பவர் விவரம் தெரியாதவர். உடைந்த எலும்பை ஆப்பரேஷன் செய்யாமல் நேரடியாகக் கட்ட முடியாது என்பது அவர் அறியாதது. புத்தூர் போய் எலும்பை கோணலாக செட் செய்து கொண்டு வருகிறார். யோசனையில்லாமல், விவரம் அறியாமல் செய்யும் காரியம் இது. புத்தூரை நம்பும் சூட்சும ஞானமுண்டு. ஆப்பரேஷனை நம்பும் சூட்சும ஞானமில்லை.

நாகரீகம், கல்வி, நகரவாழ்வு, புதிய வாழ்வு, உயர்ந்த வாழ்வு, யோகம் ஆகியவை மனிதன் அறியாமையிலிருந்து விலக உதவுபவை. பணம், அதுவும் தானே பெருகும் பணம் எதிர்காலத்திற்குரியது. **அதைப் பெற, பெற்றுப் பலன் பெற, எதிர்காலத்தை நம்ப வேண்டும், கடந்த காலக் கட்டுப்பெட்டியாக இருக்கக் கூடாது.** பணத்தை

சமூகத்தின் வழியாகவும், சக்தி எனவும், நம்பிக்கை எனவும், ஸ்தாபனம் எனவும் பல கோணங்களில் அறிய முயல்கிறோம்.

இதன்பின் ஒரு பெரிய தத்துவம் மறைந்துள்ளது. நாம் உலகத்தை அறிகிறோம். வாழ்வை அறிய முயல்கிறோம். ஞானம் என்றால் என்ன, சக்தி என்பது என்ன என்று அறிகிறோம். இவையெல்லாம் முழுமையானவை. முழுமையான சிறப்பை எய்தக் கூடியவை. எந்த விஷயத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் அறிய முடியுமோ, அந்த விஷயம் பலன் தரும். பணத்தைப் பல கோணங்களிலும் - எல்லாக் கோணங்களிலும், எல்லா அம்சங்களிலும் - அறிந்தால் அந்த அறிவு பணமாகும். பணம் என்ற பலனை அவ்வறிவு தரும்.

**அறிவு பூரணமானால், பலனாக மாறும்.**

- ✯ பணத்திற்கு ஒரு வரலாறுண்டு.
- ✯ பணம் பொருளாதாரத்திற்கு முக்கியமானது.
- ✯ இதன் திறன் ஒரு சூட்சும ஸ்தாபனத் திறன்.
- ✯ நாட்டு மக்கள் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் - இராணுவம், அரசியல், கல்வி, போக்குவரத்து, விளையாட்டு, செய்தித்துறை - பணம் முக்கியச் சேவையைச் செய்கிறது.
- ✯ புதிய டெக்னாலஜி வந்தவுடன் அதற்குச் சேவை செய்கிறது.
- ✯ சமூக லட்சியங்களை அரசியல் முதல் பல துறைகளிலும் அடைய உதவுகிறது.
- ✯ பொருளாதார சக்தியாக ஆரம்பித்து சமூக சக்தியாகிவிட்டது.



பணத்தின் அம்சங்கள் அநேகம். அதனால் நம் ஆராய்ச்சியும் அநேக வகையானது. நாம் எல்லா அம்சங்களையும் ஆராய்ச்சி செய்யுமுன் நம் முயற்சி முடிவடைகிறது. நம் ஆராய்ச்சித் திறன் முடியுமிடத்தில் ஆராய்ச்சி முடிகிறது. வேலை முடிந்தாலும், முடியாவிட்டாலும், நம் முயற்சி முடிவடைகிறது.

**மனிதன் முடியுமிடத்தில், அன்னை ஆரம்பிக்கிறார்.**

நம் முயற்சி முடியுமிடத்தில் வேலை தானே தொடர்ந்து நடந்து தன்னை முடித்துக் கொள்ளும். எந்த அளவு பலன் வரும் என்பது நம் மனத்தின் அளவைப் (personality) பொருத்தது. இதையடையும் நம்பிக்கைக்குச் சரணாகதி எனப் பெயர்.

*தொடரும்....*

✯ ✯ ✯

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிந்திக்க முடியாத மனமும், சிந்தனையை மௌனத்தால் இழந்த மனமும் எதிரெதிரானவை. இடைவிடாத அழைப்பு சிந்திக்க முடியாத மனத்தை, சிந்தனை இழந்த மனமாக்க முடியும்.

*ஒரு கோடியை மறு கோடியாக்கும் இடைவிடாத பிரார்த்தனை.*

**p.30 These rose a song of new discovery.**
**புதிய கீதம் கண்டுபிடிப்பாக எழுந்தது**

❊ ஆன்மாவின் காதலாக விடிந்த பொழுது.
❊ ஆபத்து அரவணைக்கும் நண்பனாகத் துள்ளி எழுந்தது.
❊ புது உலகம் ஜோதியில் பிறந்தது.
❊ இளமையின் சோதனை வெண்கலத்தின் சங்கநாதம்.
❊ காலத்தின் அம்பு கதிர்போல் பறந்தது.
❊ ஆத்மாவைப் பரிசாகப் பெறும் போராட்டம்.
❊ ஒளியின் தெய்வமும், இருளின் அசுரனும்.
❊ இறைவன் இதயத்தை எடுத்துரைப்பவரென வந்தவர்.
❊ எதிரியை ஏற்பதே ஏற்றம் என்று கொண்டனர்.
❊ அறிவின் மன்றத்தில் வழக்காடும் மக்கள்.
❊ இருளின் தலைவனும், ஒளியின் அரசனும்.
❊ இலக்கிய நயத்தைக் கடந்த இறைவனின் ஞானம்.
❊ பிறப்பையும், இறப்பையும் கடந்த பெருமை.
❊ நீத்தார் என நாம் கூறும் நெடுநாள் வாழ்பவர்.
❊ பல ராஜ்ய ஜீவன்கள் தம்மைப் பகிர்ந்துரைத்தன.
❊ அமர நயனங்கள் அருகில் வந்தன.
❊ சத்தியத்தின் சட்டம் சொர்க்கத்தின் முத்திரையுடன் வருகிறது.
❊ திருஷ்டியும் கனவும் சத்தியம் சொல்லும் கதைகள்.
❊ எழுத்தில் எடுபடாதவை இதயத்தில் பொறிக்கப்பட்டன.
❊ பரம ஜோதியின் பக்தி வணக்கம்.



❊ உலகம் அறியாத மின்னும் கீதம்.
❊ இடியே சிறகாகவும், மின்னலே கழுத்தாகவும் நடை பயின்றோர்.
❊ கேட்காத கேள்விக்குக் கேட்டறியாத பதில்.

*காதல் உயிரின் உணர்வுக்குரியது. உடலால் பூர்த்தியாவது. மனம் தரும் உறுதி மயக்கத்தை இலட்சியமாக்குவது. காதல் எழுந்த பின் கண் தெரியாது. புல்லுக்கும் புலியின் வீரம் தருவது காதல் உணர்வு. கட்டிளங்காளைக்குரியது காதல் வேகம். பெண்ணைப் பெறுவதே நோக்கம். பெண்ணையே பெரியதாகக் கருதுவதே நோக்கம். காதல் இலக்கியத்தின் கரு. காலத்தைக் கடந்த இலக்கியத்தை எழுதியது காதல் எனும் ஓலை. அமரகாவியம் அன்பின் பிழம்பு. காதலுக்குக் கண்ணில்லை எனில் ஆன்மா உண்டு. காலத்தைக் கடந்த காதல் காதலனுக்குக் கடவுளையும் கடந்தது. ஸ்ரீ அரவிந்தம் காதலை காலத்துள் கடவுளாக கர்மத்தைக் கரைத்து, தடைகளைத் தவிர்த்து, முடிவற்ற இன்பப் பிழம்பாகக் கொடுக்க பெண்ணின் கற்பை இருளின் வாழ்வை முடிக்கச் செய்து சாவித்திரி என்ற காவியமாகப் படைத்தது.*

✮ ✮ ✮

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி – தமிழ்நாட்டுப் பிரபலஸ்தர் மகன் வறுமைக்குள்ளானார். அன்னையைத் தேடி வந்தார். அவர் வறுமை 7ஆம் நாள் மாறியது. புதிய சேவையைக் கொடுத்தார்கள். 2, 3 மடங்கு வருமானம் வந்தது. இந்தச் சேவை அன்னைச் சேவை என்றாலும் சேவைக்கும் அன்னைக்கும் நடுவில் அன்னையைத் துரோகம் செய்தவர்களிருக்கிறார்கள். அவர்களால் பேராபத்து வருகிறது. எனவே சேவையைக் கைவிட வேண்டும் என்ற போது, கைவிட்டார். சில மாதங்களில் சேவை வருமானத்தைப்போல் 2 மடங்கு வருமானம் வருகிறது. இது எனக்குத் தெரியும். சேவை என்றாலும், துரோகிக்குப் பலன் போவது தவறு என்ற கருத்தைத் தயங்காமல் ஏற்றுக்கொண்டார். அதைச் சொல்கிறீர்களா?

அண்ணன் – இது முக்கிய இடம். இந்த அன்பர் மனநிலை எதையும் சாதிக்கும். சேவையே ஆபத்து என்பதை எவரும் ஏற்கமாட்டார்கள். இவர் ஏற்றது பெரியது. மேலும் சாதாரண விஷயங்களிலும் இப்பாகுபாடு எழும். அச்சமயங்களில் சரியான முடிவெடுப்பது சிரமம்.

தம்பி – அன்னையோடு இருந்தவர், சாதகர், முக்கியஸ்தர், உறவினர், முடிவாக நாம் என்பதுவரை விலக்க வேண்டியது, சேர்க்க வேண்டியது என இருபகுதிகள் உண்டு. அன்னையுடன் இருந்தவர்கள் அனைவரையும் சேர்க்கிறோம். எதிரிகள் அனைவரையும் விலக்குகிறோம். சரியாகப் பிரிக்கத் தெரியவில்லை.



அண்ணன் – உலகம் ஜடம். ஜடமான உலகத்தைச் சிருஷ்டித்தது மனம். இன்று மனம் ஜடத்தால் ஆளப்படுகிறது. மனம் ஜடத்தை ஆள ஆரம்பித்தால் பிரச்சினையிருக்காது.

தம்பி – அது தெரியும். நாம் மனிதனைவிடப் பணத்தை முக்கியமாக்குகிறோம். உணர்வைவிட உறவை முக்கியமாகக் கருதுகிறோம்.

அண்ணன் – இப்படிச் சொன்னால் ஏற்றுக் கொள்வார்கள். நடைமுறை வேறு. முதலாளி அன்பர். ஊழியர்கள் பக்தர்கள். பக்தர்கள் சங்கத்திற்கு முதலாளி இடம் தருகிறார். செலவுக்குத் தருகிறார். ஏற்பதா வேண்டாமா?

தம்பி – நமக்கே உதாரணம் இருக்கிறதே. இந்த இடத்தில் முதலாளியை விலக்க தொழிலாளி சம்மதப்பட மாட்டான். சேவைக்கு இடம், பணம், காணிக்கையாக மட்டும் வரவேண்டும். உண்டியலில் உள்ளதே (பேர் தெரியாமல் வந்த காணிக்கை) மூலதனம் என்றால் எவரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

அண்ணன் – முதலாளி இடம் கொடுத்தால் பக்தி வளராது. முதலாளியின் பெருமை வளரும். பெண் அழகைக் கண்டு பொறாமைப்படும் தாயார், பெண்ணுக்குப் பெரிய வரன் வந்தால், தாயாரை விலக்கி முடிவெடுக்கச் சம்மதப்படுமா? சாத்தியமா? தாயாரைக் கலந்தால் பெண்ணுக்கு இந்த வரன் அமையுமா? இக்குழந்தை விஷயத்தில் பெற்றோருக்கு இப்பாகுபாடிருந்தால், எல்லாம் நடக்கும்.

தம்பி – குழந்தைக்கு இட்லி கொடுப்பதா, தோசை கொடுப்பதா என்பதுவரை நம்மைக் கேட்டு நடக்க வேண்டும் என்று முடியும். இது நடக்காது.

அண்ணன் - முதலில் பாகுபாடு discrimination & discretion ஏற்படும்வரை கேட்டுத்தான் நடக்க வேண்டும். சட்டம் புரிந்தால், சட்டத்தைப் பின்பற்றலாம்.

தம்பி - எனக்குச் சட்டம் புரியும். குழந்தை சந்தோஷமானால் சரி, சிணுங்கினால் தப்பு. ஆரம்பத்தில் இந்தச் சட்டம் போதும்.

அண்ணன் - நான் மனமே ஜடத்தை ஆள்கிறது என்றேன். வாழ்வை ஆள்வதும் அன்றிலிருந்து இன்றுவரை மனமே. எல்லா முக்கியமான நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படை ஒரு செய்தி, ஓர் அபிப்பிராயம். செய்தி எனில் மனம். அச்செய்தி இன்று வதந்தியாகப் பரவுகிறது. இந்த வதந்தி உண்மையை எடுத்துப் போனால் உலகத்தை உடனே மாற்றலாம்.

தம்பி - இது புதியதாக இருக்கிறதே. நாம் உடலால் வாழ்ந்தாலும், உணர்வால் செயல்பட்டாலும், அதன் அடிப்படையில் ஒரு understanding கருத்துள்ளது. அக்கருத்து இன்று வதந்தி மூலம் வருகிறது என்கிறீர்களா!

அண்ணன் - இது பெரிய தத்துவம். இதைப் புரிந்து கொண்டவர் வாழ்வில் ஞானி; இந்தச் சரியான வதந்தியை எழுப்பக் கூடியவர் உலகை ஆளக்கூடியவர், மாற்றக் கூடியவர். நாம் குழந்தை விஷயத்தை மட்டும் காண்போம்.

தம்பி - புரிகிறது. பெற்றோர் குழந்தைகளின் செயல்களை, உணர்ச்சிகளை, உத்வேகங்களைக் கண்டு, அவற்றினடியில் உள்ள கருத்து opinion எது எனக் கண்டு, அவற்றை அன்னை கருத்தாக மாற்ற வேண்டும். சரியா?



அண்ணன் - இதற்கு ஒரு சாரார் விலக்கு, ஏற்கனவே - 100 ஆண்டுகட்கு முன் - அவர்கள் ஜனத்தொகையில் 100% விலக்கானவர். சரியானவர் இல்லை. குறைவு. இப்பொழுது விலக்கானவர், தவறானவர் உலகில் 50%க்கும் குறைவு. அவர்களிடம் இது பலிக்காது. அதைச் சேராதவரிடம் பலிக்கும். இக்குழந்தைக்குப் பலிக்கும்.

தம்பி - எனக்கு இவர்களைத் தெரியும். விற்காத சரக்கை அடமாக வாங்குபவர்கள், எதிரியை நம்புபவர்கள். இன்று கம்பனி பெறும் 10 லட்ச வருமானம் புதிய சரக்கை ஏற்றால் 25 லட்சம் வரும் என்றாலும், மாறாதவர்கள் இவர்கள். தவறு என்று தெரிந்து அதை நாடுபவர்கள். மகள் வாழ்வு, மருமகள் சந்தோஷத்தைப் பற்றி இக்கருத்தைத் தெரிவிக்கும் பழமொழியேயிருக்கிறதே.

அண்ணன் - சில குடும்பங்களில் அனைவரும் அப்படிப்பட்டவர்களே. சில ஊர்களில் பெரும்பாலோர் அப்படிப்பட்டவர்கள். அவர்களைப் பற்றி விளக்க ஒரு புத்தகமே எழுதலாம்.

தம்பி - குழந்தைக்குப் பலிக்குமா?

அண்ணன் - பெற்றோர் அன்னையை ஏற்றால் பலிக்கும். நாம் சொல்லும் எந்தக் குறையுமில்லாதவர் பெற்றோர். ஆனால் குறையற்றவர்கள் சுலபமாக அன்னையை ஏற்கமாட்டார்கள்.

தம்பி - முடியாது என்கிறீர்களா?

அண்ணன் - முடிந்தால் பலிக்கும் என்கிறேன்.

தம்பி - நீங்கள் சொல்வனவெல்லாம் முடியாது என்றே படுகிறதே.

அண்ணன் - இதுவரை அன்னையை **அதுபோல** ஏற்ற பக்தரைப் பார்த்திருக்கிறாயா? அதனால் சிரமம் என்கிறேன்.

தம்பி - எது சிரமம்?

அண்ணன் - அன்னையால் மனிதனுக்கு என்ன செய்ய முடியும் எனப் புரிந்து கொள்வது சிரமம். உதாரணமாக இவர்கள் சேவையில் நல்ல, பெரிய அம்சங்களுண்டு. பணம் திரட்டுவதிலும் உண்டு. ஆனால் இதே முறையை பணம் திரட்ட பயன்படுத்தினால் ஓராண்டில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் அளவுக்குப் பணம் வரும். செய்வார்களா?

தம்பி - இம்முறையால் சேவைக்குக் கோடிக்கணக்காகப் பணம் வர ஆரம்பித்தால், குழந்தை பிரசித்தி பெறுமா?

அண்ணன் - இம்முறை 24 மணி நேரத்தில் 1 கோடியைச் சேவைக்குத் தரும். அது நடந்தால், குழந்தை விஷயம் தானே பலிக்கும்.

தம்பி - நான் என்ன செய்ய?

அண்ணன் - இம்முறையை அவர்கட்கு நீ சொன்ன பிறகு, அவர்களே initiative முன்கை எடுத்து அதைப் பின்பற்ற உன்னை நாடினால், அது முதற் சகுனம், நல்ல சகுனம்.

தம்பி - அது சரியான சோதனை.

அண்ணன் - விஷயத்தைத் தெரிந்து கொண்டபின் அவர்களே விருப்பப் படுவது முடிவில் காரியம் பலிக்கும் என்பதற்கு அறிகுறி.

தம்பி - இது எப்படி எனப் பார்க்க வேண்டும்? நாம்தான் அவர்கள் பின்னாடிப் போவது வழக்கம்.

அண்ணன் - முதற்கட்டத்திற்கு அனைவரும் வருவார்கள். அடுத்த கட்டத்திற்கு இதுவரை எவரும் வந்ததில்லை. மாதம் 1



லட்சம் சம்பாதிக்கலாம் என எவ்வளவு நாளாக மையத்தில் பேசுகிறோம்? யாராவது அது எப்படி எனக் கேட்டார்களா?

தம்பி - நம்பிக்கையில்லை.

அண்ணன் - சம்பாதித்தவர்களைப் பார்த்தார்கள் இல்லையா?

தம்பி - அதுவும் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

அண்ணன் - விவரத்தைக் கேட்டு அறிந்த பின் அல்லது படித்து தெரிந்த பின் பின்பற்ற முன்வருவது அல்லது மேலும் அறிய முன்வருவது என்பது முதல் நல்ல சகுனம்.

தம்பி - நாட்டில் எல்லாக் குழந்தைகளும் இக்குழந்தைபோல் படிக்க என்ன தேவை?

அண்ணன் - பொதுவாக என்ன நினைப்போம்? இது போன்ற பள்ளிகள் பரவவேண்டும், சர்க்கார் இம்முறையைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுவோம். அதெல்லாம் உண்மை. அதனால் இப்படிப்பு நாடெங்கும் பரவாது.

தம்பி - எப்படி இப்படிப்பு நாடெங்கும் பரவும்?

அண்ணன் - நாடெங்கும் சமீபத்தில் பரவுவது என்ன என்று ஒரு உதாரணம் சொல்.

தம்பி - சமீபத்தில் T.V. பரவுகிறது. போன் அது போலிருக்கிறது. Mopedஉம் அப்படியே.

அண்ணன் - T.V.யை எப்படி அனைவரும் ஏற்றுக் கொண்டனர்?

தம்பி - வீட்டிலேயே சினிமா பார்க்கலாம் இப்போ அதுதான் பேஷன்.

அண்ணன் - வீட்டிலேயே சினிமா பார்க்கலாம் என்பது மட்டும் காரணமில்லை. அதுவும் ஒரு காரணம். 50

வருஷத்திற்கு முன் எந்த ஊரில் (சென்னை தவிர) வசதியுள்ளவர் வீட்டிலெல்லாம் போன் வந்தது?

தம்பி - நமக்கு எதற்குப் போன் என்பார்கள்.

அண்ணன் - இப்பொழுது, வசதியில்லாதவர் வீடுகளிலெல்லாம் போனிருக்கிறது.

தம்பி - அது பேஷனாகவும் ஆகிவிட்டது.

அண்ணன் - போன் பேஷனானதுதான் உண்மை. இப்படிப்புப் பேஷனாகிவிட்டால் பரவிவிடும்.

தம்பி - அது உயர்ந்த படிப்பு என்பதால் பரவாதா?

அண்ணன் - பசுமைப் புரட்சியின் பெருமை, பலன் பற்றி உனக்குத் தெரியும். அதுவே அஸ்ஸாம், பீகார், U.P., ராஜஸ்தான் போன்ற இடங்களுக்குப் பரவவில்லையே.

தம்பி - உரம், நவீன விவசாயம் பேஷனாகவில்லை. அதனால் பரவவில்லை என்கிறீர்களா?

அண்ணன் - இதுவரை உலகில் பரவினவெல்லாம் பேஷன் மூலமே பரவியுள்ளன.

தம்பி - ஏன் அப்படி?

அண்ணன் - மனிதனுக்குச் சௌகரியத்தைவிட மரியாதை முக்கியம்.

தம்பி - பணத்தைவிட மரியாதை முக்கியம் என்றும் சொல்லாம். பேஷனை ஏற்றுக்கொண்டால் மரியாதை வரும். அதனால் மனிதன் அதை நாடுகிறானா?

அண்ணன் - மனிதன் மரியாதைக்காகவே உயிர் வாழ்கிறான் என்றே சொல்லலாம்.

தம்பி - இந்தப் படிப்பைப் பேஷனாக்க முடியுமா?



அண்ணன் - அப்படியானால் நிச்சயமாகப் பரவும்.

தம்பி - பேஷன் என்றால் என்ன? அதற்கு சக்தி எப்படி வருகிறது?

அண்ணன் - மனிதன் தானே சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதைப் பேஷன் பூர்த்தி செய்கிறது.

தம்பி - அவன் தேடும் மரியாதை ஒரு product பொருளாக T.V. போல வந்தால், அதை வாங்கினால் அவன் தனக்கு மரியாதை வரும். அது தானே பெறும் மரியாதை என நினைக்கிறான்.

அண்ணன் - உலகத்திற்குத் தேவையானதை ஒரு product பொருளாக T.V. கார், கம்ப்யூட்டர்போல மாற்றிக் கொடுத்தால், அது விரைவில் பரவும். மனிதன் ஜடமாக physical உணர்வாக vitalஆக இருப்பதால் பொருள்கள் மூலமே இலட்சியம் இன்று பரவ முடியும்.

தம்பி - இதற்கடுத்த நிலையுண்டா?

அண்ணன் - ஒரு நல்ல idea கருத்தாக இலட்சியம் வந்தால் இன்று மனிதன் ஏற்கும் நிலையில் இல்லை. அப்படி வர மனிதன் mental ஆக (அறிவின் மூலம்) செயல்பட வேண்டும். அவன் T.V. வாங்கும்பொழுது, அவன் மனதில் "T.V. வாங்கி வைத்தால் மரியாதை வரும்" என்ற எண்ணமிருக்கிறது.

தம்பி - அது அறிவு mental இல்லையா?

அண்ணன் - ஒரு வகையில் மனிதன் செய்யும் எல்லாக் காரியங்களும் இதுபோன்ற ஒரு கருத்தின் அடிப்படையில்தான் அமைகிறது. ஆனால் இன்று அந்தக் கருத்தை அவன் அறிவுள்ளவர் மூலமாகவோ, புத்தகம் மூலமாகவோ அறிவதில்லை. வதந்தி மூலமாக அறிகிறான்.

தம்பி - வதந்தியை word of mouth என்கிறோம். இப்படிப்பின் பெருமை வதந்தியானால் அது பரவும்.

அண்ணன் - இன்று எது வதந்தியாக உலவுகிறது? மனிதனுக்குத் தேவையானது வதந்தியாவதில்லை. பெரிய இடம் - பணக்காரன், நடிகை, தலைவர் - மனிதன் மனதில் இருக்கிறது. அந்தச் செய்தி வதந்தியாகப் பரவுகிறது. மனிதன் vital உணர்வால் வாழ்கிறான். அறிவால் இன்னும் வாழ முயலவில்லை. மனிதன் இன்று ஏற்கும் வதந்திக்கேற்ப இப்படிப்பின் சிறப்பை உயர்த்தவோ, மாற்றவோ முயன்று பலித்தால் அது நடக்கும்.

தம்பி - மனிதன் நிலைக்கு நாம் போகலாமா? அவனை நம் நிலைக்கு உயர்த்த வேண்டாமா?

அண்ணன் - முடியும், சிரமம். அன்னை தரும் அதிர்ஷ்டம் அதுபோல் பரவலாம். ஆனால் இன்று மனிதன் அதிர்ஷ்டத்தை முயன்று பெறுவதைவிட, இருக்கும் மனநிலையைத் தீவிரமாக அனுபவிப்பதிலேயே நாட்டத்தைச் செலுத்துகிறான்.

தம்பி - சாதாரண மனிதன் இருக்கும் நிலை மிகவும் தாழ்ந்ததாயிற்றே.

அண்ணன் - அது உயர்ந்தால்தான் மனிதன் உயருவான். இதுபோன்ற படிப்பை ஏற்பான். மனிதன் இன்றுள்ள நிலையில் ஒரு 100 பேர் முயன்று சத்திய ஜீவியத்தையே தர முடியும் என்றார் பகவான்.

தம்பி - சத்திய ஜீவன் பிறந்தால் எல்லா மனிதர்களும் சத்திய ஜீவனாவார்களா?

அண்ணன் - எல்லாரும் ஆக முடியாது. தகுதியுள்ளவர்கள் பலன் பெறலாம். இந்தப் படிப்பு, செல்வம், வளம், அதிர்ஷ்டம்



development முன்னேற்றம் ஆகியவை சத்திய ஜீவனோடு ஒப்பிட்டால் மிகச் சிறியன. அதனால் இதைப் பரப்ப முடியும்.

தம்பி - சத்திய ஜீவனாக மனிதன் தயாரான பின்னால்தான் இவையெல்லாம் வரும் என்று சொல்வார்களா?

அண்ணன் - மற்ற நாடுகளில் ஏற்கனவே இவை வந்துவிட்டதால் அந்த நிபந்தனை தேவை எனத் தெரியவில்லை.

தம்பி - ஏராளமான வசதி வரும் என்றால் அனைவரும் பிரியப்படுவார்கள். ஆனால் முதல் நிபந்தனை பூரண நல்லெண்ணம் வேண்டும் என்றால் அதிகம் பேர் தேறமாட்டார்கள்.

அண்ணன் - அல்லது நேர்மையும், திறமையும் மட்டுமாவது வேண்டும்.

தம்பி - தன்னை மனிதன் அப்படித்தான் நினைப்பான்.

அண்ணன் - நினைப்பதற்குப் பலன் வாராது. உள்ளதற்குத்தான் பலன் வரும். மூன்றாம் நிபந்தனையாகவும் ஒன்றைக் கூறலாம். அடக்கம் அளவுகடந்து இருந்தாலும் பலிக்கும்.

தம்பி - பயந்துதான் மனிதன் அடங்குவானே தவிர, தானே அடங்கமாட்டான்.

அண்ணன் - கர்வமானவன், கௌரவத்தை நாடுபவன், பெருமை, வீண் பெருமையை நாடுபவர்கள் அறிவால் அடக்கத்தின் பெருமையை உணர்ந்தால் பலன் வரும். மேடைக்கு வந்தால் அடக்கமாகப் பேச வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் மேடையிலிருந்து சவால் விட்டார்கள்.

தம்பி - மேடையில் வந்த நாகரீகம், மனதில் வந்தால் நல்லது. அல்லது பெரிய ஆத்மா ஒன்று உலகத்தின் சார்பாக அடக்கத்தை மேற்கொண்டால் போதுமா?

அண்ணன் - அது போதுமா என்று சொல்ல முடியவில்லை. அதற்கு நல்ல பலனிருக்கும். அதுவரை சொல்லலாம். மேடையில் உள்ள அடக்கமே உண்மையான அடக்கமானால் அதற்குப் பலனிருக்கும்.

தம்பி - அடக்கம் மட்டுமிருந்தால் அதிர்ஷ்டம் வருமா?

அண்ணன் - நிச்சயம் வரும். அது மட்டுமே போதும் என்றும் சொல்லலாம். இன்டர்நெட் வந்திருக்கிறது. அது idea கருத்துக்குப் பேஷன் பெற்றுள்ள சக்தியைக் கொடுக்கலாம். பார்க்க வேண்டும். மனிதனுக்குத் character திறமையுள்ள நல்ல சுபாவம் வேண்டும்.

முன்னுக்கு வந்த நாடுகளில் தனிமனிதன் அது போன்ற சுபாவத்தை உற்பத்தி செய்து அதன் மூலம் சமூகம் அதைப் பெற்றது. நம் நாட்டில் தலைகீழாக வருகிறது. உலகம் அந்தச் சுபாவத்தைப் போற்றுவதால் மனிதன் பேஷனாக அதை ஏற்று முன்னேற வேண்டும்.

தம்பி - மற்ற நாடுகளில் இந்த முன்னேற்றம் வந்து விட்டதால், இனி பரவ வேண்டியதுதானே.

அண்ணன் - அதைச் சமூகம் ஏற்க ஒரு தனிமனிதன் முன்னோடியாக வரவேண்டும். அதாவது ஒரு சிலர் செய்து - அதிர்ஷ்டம், இந்தப் படிப்பு - அதைச் சமூகம் பார்த்து ஏற்று, பிறகு அனைவருக்கும் வரவேண்டும்.

தம்பி - அதற்கு ஏதாவது சுருக்கு வழியிருக்கிறதா?

அண்ணன் - அந்த முன்னோடி அன்னை அன்பரானால், உலகம் அவரை ஏற்கும். படிப்பு, அதிர்ஷ்டம் தானே பரவும்*. நாம் யாருக்கும் சொல்லக் கூடாது. செய்வதானால் நாமே செய்து, நாமே முன்னோடியாக வேண்டும்.

---

* Man must do it impersonally or should represent a universal vibration, not as a personal achievement out of his own efficiency.



தம்பி - அன்பராக இருந்தால் படிப்பும், அதிர்ஷ்டமும் தானே பரவும் என்பதை நான் அறிவேன். மேலும் விளக்கம் (its rationale) கொடுக்க வேண்டும். எங்களூர் செட்டித் தெருவில் ஒரு விசேஷம். கோமுட்டிச் செட்டியார் எங்களூரில் அதிகம். வசதியானவர்கள். ஒரு கல்யாணத்தில் ஓர் அம்மாள் புது டிசைன் புடவை உடுத்தினால், அவ்வூரில் அடுத்த கல்யாணத்திற்கு வரும் செட்டியார் பெண்கள் எல்லாம் அந்த டிசைன் புடவை உடுத்தியிருப்பார்கள். இது நடக்கிறது என்று அறிவோம். எப்படி எனப் புரிகிறது. ஜாதி ஒன்றே. பண வசதியுண்டு. போட்டி அதிகம். புடவை வாங்கிய இடம் தெரிவது சுலபம். அதனால் இது நடக்கிறது. அதுபோல் அன்னை சக்தியை விளக்க முடியுமா?

அண்ணன் - குருஷேத்திரம் போன சேலம் பெண் தன் டூரிஸ்ட் குரூப்பை விட்டுப் போய் வழி தெரியாமல் தவித்து, அன்னையை அழைத்து திரும்பி வந்தது தெரியுமல்லவா? வழி தெரியவில்லை. பாஷை தெரியவில்லை. படிக்காத பெண். வயதானவர். போலீஸில் போய் கேட்கும் அளவு விவரம் தெரியாதவர். முருகனையும், விநாயகரையும், அம்மனையும் கூப்பிட்டார். எதுவும் நடக்கவில்லை. எப்பொழுதோ கேள்விப்பட்ட அன்னை நினைவு வந்து அவர்களாவது காப்பாற்றக் கூடாதா என்று நினைத்தார். தமிழ்க் குரல் கேட்டது. தப்பித்துக் கொண்டார்.

தம்பி - இது எப்படி நடக்கிறது?

அண்ணன் - நாம் காசிக்குத் தந்தி அனுப்பினால் போய்ச் சேருகிறது. எப்படி? போஸ்ட்டாபீஸ், தந்தி என்பது சர்க்கார் ஸ்தாபனம். தந்தியை வாங்கி, அனுப்ப ஏற்பட்டது.

அதற்குக் கடமைப்பட்டது. அதனால் அனுப்பிய தந்தி விலாசத்திற்குப் போகிறது. ரயில்வேயில் தந்தியுண்டு. நம் தந்தியை வாங்கவோ, அனுப்பவோ, கொண்டு போய்க் கொடுக்கவோ கடமைப்பட்டவரில்லை. இஷ்டப்பட்டால் செய்யலாம். போஸ்ட்டாபீஸ் ஸ்தாபனம், கடமைப்பட்ட ஸ்தாபனம். ரயில்வே நமக்குக் கடமைப்பட்டதன்று. சூட்சும உலகம் என ஒன்றுண்டு. அதில் உலகமே அடக்கம். அன்னை அவ்வுலகில் வசிக்கிறார். குருஷேத்திரத்தில் பாட்டி கொடுத்த குரல் சூட்சும உலகில் அன்னைக்குக் கேட்கிறது. அன்னை அதன் மூலம் பாட்டிக்கு உதவக்கூடியவரைத் தேடி அவருக்கு உத்தரவு போடுகிறார். சூட்சும ஸ்தாபனம் இது. அன்னை போட்ட உத்தரவு குருக்ஷேத்திரத்தில் உள்ள தமிழ் பேசுபவர்கட்குக் கேட்டது. பாட்டி அவர்களை சந்தித்தார். பத்திரமாக வீடு வந்து சேர்ந்தார்.

தம்பி - மற்ற கடவுள்கட்கு இந்தச் சூட்சும ஸ்தாபனமில்லையா?

அண்ணன் - நாம் மற்ற தெய்வங்கள் இப்படி நடப்பதாகக் கேள்விப்படவில்லை. தெய்வ லோகத்திற்கு (overmental world) இந்த சக்தியிருப்பதாகத் தெரியவில்லை.

தம்பி - சங்ராச்சாரியாருக்கு காஷ்மீர் ராஜா இறந்துவிட்டார் எனக் காசியில் அப்படித்தான் தெரிந்ததா?

அண்ணன் - சங்ராச்சாரியார் அவதாரப் புருஷர், விபூதி என்கிறார் பகவான். அவருக்கு நடப்பது நமக்கு நடக்குமா? விழுப்புரம் போன பணக்காரப் பாட்டி பர்ஸைத் தொலைத்து விட்டார். பஸ்ஸுக்குப் பணமில்லை. டாக்ஸி ஸ்டாண்டிற்குப் போனார். டாக்ஸிகாரனிடம் "நான் பர்ஸைத் தொலைத்துவிட்டேன். என்னைப் பாண்டிக்குக்



கொண்டு போய்விடு. பணம் வீட்டில் தருகிறேன் என்றார். டாக்ஸி டிரைவர் பாட்டி கழுத்தில் 100 பவுன் நகையைப் பார்த்தான். கொண்டு வந்து விட்டுவிட்டுப் பணம் வாங்கிக் கொண்டு போனான். இல்லாதவருக்கு நடக்குமா?

தம்பி - சூட்சும ஸ்தாபனமில்லாமலும் இது நடக்குமா?

அண்ணன் - நீ குருக்ஷேத்திரம் போய் வழி தெரியாவிட்டால் என்ன செய்வாய். போலீஸ் உதவியை நாடலாம். அந்த ஊரில் உள்ள பெரிய கம்பனி ஒன்றிற்கு நம் ஊரில் கிளையிருந்தால், அவர்களை நம்மூர்க் கிளையுடன் போனில் பேசச் சொல்லலாம். உள்ளூர்காரருக்கு உன்னை அடையாளம் காண முடியுமானால், வீட்டிலிருந்து தந்தி மணியார்டர் வரலாம். இவையெல்லாம் எல்லா இடங்களிலும் முடியாது. எல்லாருக்கும் முடியாது. ஆனால் வசதியுள்ளவர்க்கு, திறமையுள்ளவர்க்கு, சாதுர்யச்சாலிக்குப் பலிக்கும் நேரம் உண்டு. சரி, குருக்ஷேத்திரத்தில் பாட்டி கொடுத்த குரல் அன்னைக்குக் கேட்டுப் பதில் வந்தது, அன்னை சூட்சும ஸ்தாபனம். அன்னைக்கு இந்த சக்தியுண்டு என்றால் நம்ப முடியுமா? சிலர் நம்புவார்கள், வேறு சிலர் நம்பமாட்டார்கள்.

தம்பி - நம்பினாலும் அடுத்த முறை பிரச்சினை வரும்பொழுது 'அன்னைக்கு இந்த சக்தியுண்டு நான் அன்னையை அழைக்கப் போகிறேன்'' என்று நம்புவது அரிது. அதைத்தான் அன்னையை அறியவேண்டும், நம்ப வேண்டும் என்கிறீர்களா?

அண்ணன் - 1994இல் சர்வதேசக் கமிஷன் ஒன்றில் அன்பர், உலகம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வழியுண்டு

எனப் பேசினார். ரிப்போர்ட்டில் எழுதினார். ஐரோப்பாவில் வேலையில்லாத் திண்டாட்டம் 10% முதல் 12% வரையுள்ளது. அமெரிக்காவில் ஆள் கிடைக்கவில்லை. ஹாலந்தில் இந்தச் சதவீதம் 1½%க்கு வந்துவிட்டது. இங்கு அன்னை செயல்பட்டார் என நாம் கூறினால் யார் புரிந்து கொள்வார்கள்? புரிந்து கொண்டாலும் எப்படி எனப் புரியும். அதை எத்தனை அன்பர்கள் உணர்வால் ஏற்றுக் கொள்வார்கள்?

தம்பி – ஏன் அமெரிக்காவிலும், ஹாலந்திலும் இப்படி என்று கேட்பார்களே?

அண்ணன் – இக்கமிஷனில் 3 அன்பர்களிருந்தார்கள். அவர்களில் இருவர் அமெரிக்காவிலும், ஒருவர் ஹாலந்திலும் இருக்கிறார் என்றால், எத்தனைப் பேருக்கு அது பயன்படும்?

தம்பி – இக்கருத்தை ஏற்பது சுலபமன்று. அதற்குப் பெரிய நம்பிக்கை வேண்டும்.

அண்ணன் – இவை போன்ற நிகழ்ச்சிகள் 100க்கு மேல் எழுதப்பட்டுள்ளன. இப்பெற்றோர் அவற்றை எடுத்து, ஆராய்ந்து, அங்கெல்லாம் அன்னை சக்தி செயல்பட்டுள்ளது, எப்படிச் செயல்பட்டது என அறிய முன்வருவார்களா? வந்தபின் அதை ஏற்பார்களா? அதை ஏற்கும் நம்பிக்கையிருந்தால் அது குழந்தைக்கு உலகப் பிரசித்தி பெற்றுத் தரும்.

தம்பி – இவற்றை எல்லாம் நாம் பிறரிடம் சொல்வதே கஷ்டம். ஒருவர் சொல்லி அடுத்தவர் ஏற்கும் விஷயம் இது அன்று. தானே மனதில்பட வேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கைக்கு ஆள் தேறாது.

*தொடரும்.....*

☆ ☆ ☆





## இலட்சியத் திருமணம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

ஒ அதுவா அம்மா, நம்ம தெருவில் புதிதாக ஒரு பாட்டியும், தாத்தாவும் குடிவந்திருக்கிறார்கள். அவர்கள் பேரக்குழந்தைகளை அடுத்த தெருவில் உள்ள பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறார்கள். இத்தனை நேரமாகியும் குழந்தைகளைக் காணாததால் பாட்டி கவலைப்பட்டார். நான் போய் அழைத்து வந்து விட்டுவிட்டு வருகிறேன். அதுதான் நேரமாகிவிட்டது என்றாள். ஏன் அவர்கள் வீட்டில் யாரும் போய்ப் பார்க்க மாட்டார்களா? நீதான் ஊருக்கு உழைப்பவளா? என்றாள் அம்மா.

ஏனம்மா! இப்படிப் பேசுகிறாய் அவர்கள் வீட்டு நிலைமை தெரிந்தால் நீ இப்படிப் பேசமாட்டாய். அந்தப் பாட்டியின் மருமகள் அகால மரணமடைந்துவிட்டாள். குழந்தைகள் 3 வயதும், 6 வயதும் ஆகின்ற சிறுவர்கள். வீட்டில் தாத்தா எங்கோ வெளியில் போயிருக்கிறாராம்.

அது சரி. அவர்கள் பிள்ளையுமா இல்லை. தன் குழந்தை மீது பெற்ற அப்பாவுக்கு அக்கறையில்லையா? என்றாள் அம்மா.

அதுதானே பிரச்சினை. அந்தப் பெண் இறந்து போனதிலிருந்து பிடிப்பில்லாமலிருந்தானாம். யாரோ ஒருத்தியை மணந்து கொண்டானாம். அவளோ இந்தக் குழந்தைகளைக் கண்டாலே வெறுக்கிறாளாம். குழந்தைகள் என்ன செய்யும் பாவம்? என்றாள் இரக்கத்துடன்.

கேட்க நன்றாகத்தானிருக்கிறது. நாங்கள் உன் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படுகிறோம், நாளையே கல்யாணமாகி ஒரு வீட்டிற்குப் போக வேண்டியவள் நீ. இந்தச் சமயத்தில் பாட்டி பேத்தி என்று அலைய ஆரம்பித்தால் நாளைக்கு யார் பதில் சொல்வது? என்றாள் அம்மா.

என் கல்யாணத்திற்கும், இந்த உதவிகளுக்கும் என்னம்மா சம்பந்தம்? ஏதோ நம்மாலியன்ற உதவியைச் செய்கின்றோம். அவ்வளவுதான்! என்று பேசிக் கொண்டே முகம் கழுவி டிபன் சாப்பிட்டாள்.

அம்மா! நான் போய் ஒருமுறை அந்தக் குழந்தைகளைப் பார்த்துவிட்டு வருகிறேனம்மா என்று கெஞ்சுவதுபோல் கேட்டாள்.

பொழுது போய்விட்டது. அப்பா வந்தால் உமா எங்கே என்பார். போனோம் வந்தோமென்று வா என்றாள் அம்மா.

தெருக்கோடி வீடு அது. உள்ளே ஹோம் ஒர்க் முடித்துவிட்டு ஏதோ விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், இவளைக் கண்டவுடன் ஐ! ஆபீஸ் ஆன்ட்டி என்று அளவு கடந்த மகிழ்வுடன் ஓடிவந்து கட்டிக் கொண்டன. கள்ளமறியாத இந்தக் குழந்தைகளின் அன்பில் தான் மயங்குவதை உணர்ந்தாள்.

சரி சரி. ஹோம் ஒர்க் செய்தீர்களா? என்றாள். ஓடிச்சென்று நோட்புக்கை எடுத்து வந்து காட்டினார்கள். அரவிந்த் தப்புத்தப்பாய்ச் செய்திருந்தான்.

பாருங்கள் ஆன்ட்டி இவன் தப்புத்தப்பாய் எழுதியிருக்கான், சொன்னால் அழுவான் என்றாள் ஜனனி பெரிய மனுஷிபோல. உமாவுக்குச் சிரிப்பு வந்தது.

அர்விந்த் நல்லபிள்ளையாயிற்றே. ஆன்ட்டி சொன்னால் அழவே மாட்டான். இல்லையா அர்விந்த் என்று அணைத்து முத்தமிட்டாள். அன்பிற்கு அடங்காத ஜீவனுண்டா? ஆமாம் என்று வெட்கமாய்ச் சிரித்தான்.



கொஞ்சம் கொஞ்சமாய் அவள் திருத்தி எழுதப் பழக்கினாள். அழகாய் எழுதினான். சிங்கக் குட்டியாயிற்றே அர்விந்த் அவனை யாரும் ஜெயிக்க முடியாது என்று முதுகில் தட்டினாள். குழந்தைக்கு ஒரே மகிழ்ச்சி. ஜனனி! நீயும்தான் சமர்த்துப் பாப்பா. ஆன்ட்டிக்கு நேரமாகிவிட்டது. பாட்டியைப் படுத்தாமல் இருக்க வேண்டும். நாளை சாக்லேட் வாங்கி வருவேன் என்று விடை பெற்றாள். அர்விந்துக்கு அவளைப் பிரிய மனமில்லை.

வீட்டிற்குள் நுழைந்த உமாவை அம்மா, உமா! நான் சொல்கிறேனே என்று கோபப்படாதே. எனக்கும் அந்தக் குழந்தைகளை நினைக்க வேதனையாகத் தானிருக்கிறது. ஆனால் நாளையே உனக்கு ஒரு கல்யாணமாகி நீ மாமியார் வீடு செல்லும் போது அந்தக் குழந்தைகள் ஏங்கிப் போவார்கள், நீ குறுக்கிடாதிருந்தால் அவர்கள் வாழ்வை அவர்களே அமைத்துக் கொள்வார்கள் என்றாள்.

அம்மா! ஒரு கோணத்தில் உன் வார்த்தை சரிதான். எந்தப் பயனும் கருதி நான் இதைச் செய்யவில்லையம்மா. அன்னையின் சேவையாக எண்ணித்தான் செய்கிறேன். நிச்சயம் கவலைப்படும்படி எதுவும் நேராது என்றாள் உமா.

மறுநாள் இவள் ஆபீஸ் முடிந்து வரும்போது குழந்தைகள் ரெடியாக வாசலில் இவளுக்காகக் காத்திருந்தன.

அம்மா சொல்வதுபோல் இந்தக் குழந்தைகளை ஏங்க வைத்துவிடுவேனா என்று ஒரு கணம் தயங்கினாள். பிறகு அன்னையின் அன்புருவை எண்ணி அதை மறந்துவிட்டாள்.

குழந்தைகளிடம் சாக்லேட்டை நீட்டினாள். இவள் கையையும் சேர்த்துப் பிடித்து உள்ளே இழுத்தனர். ஆன்ட்டி நீங்கள் இன்று எங்களோடுதான் டிபன் சாப்பிட வேண்டும் என்றனர்.

சமையலறையிலிருந்து வெளிபட்ட பாட்டி குழந்தைகளைவிட உற்சாகமாய் வரவேற்றாள். வா உமா, நீ வராமல் டிபன் சாப்பிட மாட்டோம் என்று ஒரே பிடிவாதம். குழந்தைகளோடு நீயும் ஒருவாய் சாப்பிடு என்று மூன்று பிளேட்களில் வெங்காய ரவா உப்புமாவை மணக்க மணக்க எடுத்து வந்தாள்.

உங்களுக்கு ஏன் பாட்டி சிரமம்? என்றாள் உமா.

சிரமம் ஒன்றுமில்லை. உன்னைப் பார்த்துவிட்டால் எனக்கு யானை பலம் வந்துவிடுகிறது என்றாள் பாட்டி. குழந்தைகள் இப்போதெல்லாம் கலகலப்பாயிருக்கிறார்கள். உன் பேச்சுத்தான் எப்போதும். மூன்று வருடங்களாய் இருட்டில் கிடந்தோம். அன்னை உன்மூலம் எங்களை வெளிச்சத்திற்கு அழைத்து வந்துவிட்டார் என்று தழுதழுத்தாள் பாட்டி.

இவர்கள் இப்படித் தன்னைக் கொண்டாடுவதைப் பார்த்து அம்மா சொன்னது நினைவிற்கு வந்தது. ஆனால் என்ன செய்ய? இப்படி ஒரு குடும்பம் மலர முடியுமானால் தான் அன்பு செய்யாமல் இருக்க முடியுமா? இந்த அன்பில் கள்ளம் கபடம் ஏதுமில்லை. குழந்தையும் தெய்வமும் ஒன்றல்லவா. சரியென்று குழந்தைகளுடன் அமர்ந்து டிபன் சாப்பிட்டாள். போட்டி போட்டுக் கொண்டு குழந்தைகள் சாப்பிட்டன. பெரிய கும்பாபிஷேகம் செய்து முடித்தாற்போலிருந்தது பாட்டிக்கு. இவர்கள் தாயின் மறைவிற்குப் பிறகு இவர்களை வளர்க்க ஒண்டியாய் எத்தனை இன்னல்கள் அனுபவித்திருப்பாள். ஒரு வேளை உணவும் குழந்தைகள் உண்டதில்லை. எதற்கும் சிணுங்கல், படுத்தல். ஆனால் இன்று எத்தனை மகிழ்ச்சி!

உமா! நீ மகராசியாய் இருக்க வேண்டும். உன்னால்தான் குழந்தைகள் இவ்வளவு மாறியிருக்கிறார்கள் என்றாள் பாட்டி.

நேரமாகிவிட்டதென்று விடைபெற்றாள்.



இன்றும் குழந்தைகளை அழைத்துவர ஸ்கூலுக்குப் போனாயா? என்றாள் அம்மா.

இல்லையம்மா. வரும் வழியில் என்னைப் பிடித்துக் கொண்டார்கள். என்னைப் பார்த்துவிட்டால் அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? என்றாள். அம்மாவிற்கு இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லை. உண்மையில் அம்மா நல்லவற்றிற்கு எதிரியல்லள். தன் பெண்ணின் உள்ளம் வரும் மாமியார் வீட்டார்க்குப் புரிய வேண்டுமே என்ற கவலையில்தான் அவள் இப்படி நினைக்கிறாள்.

சரி சரி. டிபன் சாப்பிட வா என்றாள் அம்மா. இன்று குழந்தைகளுக்காக அவர்களுடன் டிபன் சாப்பிட்டேனம்மா. பாட்டிக்கும் ரொம்பச் சந்தோஷம் என்றாள்.

அம்மா ஒன்றும் பேசவில்லை. இது எங்கு போய் முடியுமோ என்ற கவலை.

ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகள் இவளைத் தேடி வந்துவிடுவர். பாட்டி உமாவிற்குத் தொந்திரவு தரக்கூடாது என எவ்வளவோ பிடிவாதமாய் இருந்தும் குழந்தைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சாப்பாடு, படிப்பு எல்லாம் இவர்கள் வீட்டில்தான். தியான மையம் சென்றுவிட்டு வீட்டிற்குப் போவார்கள்.

கள்ளமில்லாமல் இந்தக் குழந்தைகள் இவர்கள் வீட்டில் பழகிவிட்டார்கள். அவர்களின் தூய அன்பு இவள் அம்மா அப்பாவையும் ஈர்த்துவிட்டது. உமா ஆபீஸ் சென்று இவர்களுக்கு விடுமுறையானால் இவள் பெற்றோருடன் இருந்துவிடுவார்கள். சமையலறையில் அம்மாவிற்கு உதவி என்று ஜனனி தன் பிஞ்சுக் கரங்களால் ஏதேனும் செய்வாள். இவள் அம்மாவிற்கு வேலை செய்யும் போது முகம் வியர்த்தால் அம்மா என்று பக்கத்தில் வந்து முகத்தைத் துடைக்கட்டுமா என்பான் அர்விந்த் அன்பாக. உடனே

இவள் அம்மா இந்தக் குழந்தைகளை ஒதுக்கி வைக்க யாருக்கு மனம் வரும் என்று உருகிப்போவாள்.

இவள் தந்தை மார்க்கெட் கிளம்பும்போது சின்னக் கூடையை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு, நானும் ஒங்களோட வருவேன் அப்பா என்பான். அவராலும் இந்தக் குழந்தைகளின் கலப்பிடமில்லாத அன்பைத் தள்ளமுடியாது.

இதற்கிடையில் உமாவின் திருமணம் கூடிவராமலிருந்தது. அவளோ முன்பின் அறியாதவர்கள் வந்து சந்தையில் மாடு பிடிப்பதைப் போல் ஒரு பெண்ணைப் பேரம் பேசி விட்டுப் போகும் அநாகரிகத்தை வெறுத்தாள். அதற்காக அவள் நாலு பேருடன் கலகலப்பாகப் பேசிப் பழகி காதலிக்கும் இயல்பும் இல்லாதவள். ஒரு நேரம் இந்தக் கல்யாணம் என்பதே ஒரு பெரும் பாரம்போல் தோன்றும். இந்தக் குழந்தைகளோ இவர்கள் வீட்டிலிருப்பதைத்தான் பெரிதும் விரும்பினர்.

இதற்கிடையில் ஒரு நாள் அர்விந்துக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. பாட்டியும், தாத்தாவும் எவ்வளவு சொல்லியும் அவன் உமாவைவிட்டுப் பிரியாமல் அடம் பிடித்தான். இதனால் இரண்டு நாட்கள் உமா வேலைக்குப் போகவில்லை. அவன் அயர்ந்து உறங்கும் நேரம் பார்த்து தியான மையம் சென்று அவன் நலம் பெற பிரார்த்தித்து வந்தாள். இவள் திரும்பி வரும் நேரம், அர்விந்த் கண்விழித்தான். ஆன்ட்டி நீ என்னை விட்டுட்டு எங்கே போனே என்றான். உனக்கு உடம்பு சரியாகி நீ சந்தோஷமா வெளையாடணும்னு அன்னைகிட்டே வேண்டிக்கப் போனேன் என்றாள். அன்னை என்ன சொன்னாங்க என்றான். சரின்னு சொன்னாங்க. அங்கிருந்து கொண்டுவந்த பூவரச மலரைத் தந்தாள். வாங்கி சட்டைப் பையில் வைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து சரி வா விளையாடலாம் என்றதும் எல்லோர்க்கும் ஒரே மகிழ்ச்சி. பொய் சொன்னால் பிடிக்காது. புத்தகங்களை கிழித்தால் அன்னைக்குப் பிடிக்காது. பொருள்களை அலட்சியப்படுத்தினால்



அன்னைக்குப் பிடிக்காது என்று ஒவ்வொன்றாக அன்னையின் வழிபாட்டு முறைகள் குழந்தைகளுக்குப் பழக்கமாகிவிட்டது. எந்தத் தேவையானாலும் அன்னையிடம் வேண்டிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள்.

ஒரு நாள் உமாவைப் பெண் பார்க்க வருவதாகவும் பெண்ணைப் பற்றித் தாங்கள் யார் மூலம் அறிந்தார்கள் என்ற விபரத்துடன் கடிதம் வந்தது. பையன் நல்ல பதவியில் இருக்கிறான். நல்ல வசதியான வீடு. நல்ல பெற்றோர்கள் என்பதெல்லாம் அறியவந்தது. எல்லாம் சரிதான் இந்தக் குழந்தைகள் உமாவின் பிரிவை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள். எந்தப் பையனும் தனக்கு மனைவியாக வரும் பெண் யாரையும் விடத் தன்னையே நேசிப்பதைத் தானே விரும்புவான். நல்ல வரனாக இருக்கிறது. பெண் பார்க்க வரும் போது குழந்தைகளை என்ன செய்வது. உமாவின் பெற்றோர் தவித்தனர்.

பெண் பார்க்க வருபவர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வருவதாகத் தந்தி வந்தது. அம்மாவுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ஏதோ பலகாரம் செய்ய ஆரம்பித்தாள். உமாவிற்கு என்ன அலங்காரம் செய்து கொள்ளவேண்டும் என்று அறிவுரை கூறினாள். ஏதோ வீட்டில் மகிழ்ச்சியாய் நடக்கப் போவதாய் குழந்தைகள் உணர்ந்து நானும் இன்று புதுசு போட்டுப்பேன் என்று ஆவலுடன் தனித்தனியே கூறினர். அம்மா, உமா இன்று ஒருநாள் குழந்தைகளைப் பாட்டியைப் பார்த்துக் கொள்ளச் சொல். 6 மணிக்கு அவர்கள் வரும்போது நீ ரெடியாக வேண்டும் என்றாள்.

அம்மா இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதை மறந்துவிட்டாயா? 6 மணிக்குத் தியான மையம் செல்லவேண்டும். இந்தக் குழந்தைகள் தெய்வங்கள். இவர்களால் நமக்கு ஒரு இடைஞ்சலும் வராது. அன்னை உடனிருப்பார். கவலைப்படாமலிரு என்று கூறிவிட்டு குழந்தைகளுடன் தியானமையம் சென்றுவிட்டாள்.

பூ, பழம், வெற்றிலைப் பாக்குகளுடன் வந்த உமாவின் அப்பா, இந்தா இவற்றையெல்லாம் தட்டில் எடுத்துவை. உமா எங்கே அலங்காரம் ஆகிவிட்டதா? என்று மகிழ்ச்சியாக வந்தார்.

அம்மா பதற்றத்துடன் காணப்பட்டாள். என்ன சொல்ல, உமா தியான மையம் சென்றிருக்கிறாள். மணி ஆகிக் கொண்டிருக்கிறது. அவளிடம் வேறு எந்த மரியாதைக் குறைவும் கிடையாது. அன்னையைத் தவறாது வணங்குவது நல்லதுதான். இன்று பிள்ளை வீட்டார் வரும்போது சற்று வீட்டிலிருந்து பிறகு போகலாம். நான் என்ன செய்யட்டும்? என்று தவித்தாள்.

சரி. வீணாகக் கவலைப்படுவதை விட்டு விட்டு அன்னையிடம் ஒப்படைப்போம். எல்லாம் சரியாக நடக்கும் என்று அப்பா கூறிவிட்டு அமைதியாகிவிட்டார்.

அன்னையைத் தரிசித்துவிட்டு மிகுந்த மனநிறைவுடன் வந்தாள் உமா. குழந்தைகள் ஏக மகிழ்ச்சியுடன் மாப்பிள்ளை வரவில்லையா அம்மா என்று இவள் அம்மாவிடம் சென்று கள்ளமில்லாமல் விசாரித்தன. இவர்கள்தான் பிரச்சினை என அவர்கள் நினைப்பதை அறியாத அந்தக் குழந்தைகளை உமா ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டாள். அம்மா அவளுக்கு நிறையப்பூ வைத்து அணிகள் அணிவித்தாள். எதற்கம்மா இந்த ஆடம்பரம் என்றாள் உமா.

மணியாகிவிட்டது. இன்னும் பிள்ளைவீட்டார் வரவில்லை. சீக்கிரம் வந்து விடுவார்களோ என்று கவலைப்பட்டது போக வரவில்லையே என்று கவலைப்பட ஆரம்பித்தனர். ஆனால் அதற்குத் தேவையில்லை.

வாசலில் கார் ஹாரன் சத்தம். குழந்தைகள் மாப்பிள்ளை வந்தாச்சு என்று ஆரவாரித்தன. வீடு களை கட்ட ஆரம்பித்தது.

மாப்பிள்ளை வீட்டார் வந்தவுடன், தாமதத்திற்கு மன்னிக்க வேண்டும், வழியில் பஸ் ரிப்பேராகி லேட்டாயிடுத்து என்று கூறினர். உமா அன்னையே என்று நன்றியுடன் நினைக்கிறாள்.



அடுத்துப் பெண் பார்க்கும் படலம். பிள்ளை இலட்சணமாய் இருந்தான். பெற்றோர் மட்டுமே வந்திருந்தனர். பெரிய மனிதர்கள் எல்லாவற்றிலுமே பெரியவர்கள். மிகப் பெருந்தன்மையாய் நடந்து கொண்டனர். உமாவை அழைத்து வரச் சொன்னதும், காபியுடன் உமா வந்தாள். அவள் புடவைத் தலைப்பைப் பற்றிய வண்ணம் அர்விந்த் உடன் வந்தான். எல்லோருக்கும் (பெண் வீட்டாருக்கு) சற்று சங்கடமாயிருந்தது. பிள்ளை வீட்டாரின் பேச்சு அவர்களை அமைதிப்படுத்தியது. பிள்ளையின் தாய், குட்டிப்பையா இங்கே வா என்று அன்புடன் அழைத்து மடியில் அமர்த்திக் கொண்டாள். பிள்ளையின் தந்தை காபி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு நமஸ்காரமெல்லாம் இப்போது வேண்டாம் இப்படி உட்கார்ந்து கொள் என்று அன்பாகக் கூறினார். உமாவிற்கு ஆரம்பமே இதமாய் இருப்பதாய்த் தோன்றியது.

உமாவின் பெற்றோர் அடுத்து என்ன செய்வது எனத் தவித்த போது பெண்ணைப் பெற்றவர்கள் எங்களுக்கு எதுவும் குறைவில்லை. நாங்கள் பெண்ணைப் பற்றிக் கேட்டறிந்து பிடித்துப் போய்தான் வந்தோம். பெண்ணும் பையனைப் பார்க்கட்டும் கல்யாண பேரம் எதுவும் வேண்டாம். நீங்களும் எங்களைப் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்து கொண்டு முடிவு செய்யலாம் என்றனர்.

நான் தனியாகப் பெண்ணிடம் பேசவேண்டும் என்றான் மாப்பிள்ளை பையன். காலம் எவ்வளவோ மாறிவிட்டது. இருவீட்டாருமே தடை எண்ணவில்லை.

பக்கத்து அறைக்குப் பையன் செல்ல, உமா அவனைப் பின்தொடர குழந்தைகள் ஓடி வந்தனர். எல்லோரும் அவர்களைத் தடுக்க முயன்றனர். ஆனால் மாப்பிள்ளைப் பையன் அவர்களைத் தடுக்க வேண்டாம். குழந்தைகள் என்றால் எங்கள் வீட்டினர்க்கு மிகவும் பிடிக்கும் என்று கூறி அரவிந்தைத் தூக்கிக் கொண்டான். உமாவிற்கு அன்னையின் அன்பு தன் மீது இரங்குவதுபோல்

இருந்தது. எல்லோர்க்கும் ஒரே வியப்பு. உமா அதிர்ஷ்டசாலிதான் என்று பேசிக் கொண்டனர்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| **1.** | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. **20** |
| **2.** | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. **20** |
| **3.** | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. **20** |
| **4.** | சிறியதும் பெரியதும் | ரூ. **20** |
| **5.** | கணவன் மனைவி | ரூ. **20** |
| **6.** | இரத்தினச் சுருக்கம் | ரூ. **20** |
| **7.** | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. **40** |
| **8.** | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.**100** |
| **9.** | அதிர்ஷ்டம் | ரூ.**100** |
| **10.** | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.**100** |
| **11.** | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.**100** |
| **12.** | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. **20** |
| **13.** | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. **20** |
| **14.** | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. **80** |
| **15.** | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. **60** |
| **16.** | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.**150** |
| **17.** | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. **60** |
| **18.** | அன்னையின் வாழ்வில் | ரூ. **80** |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## விளம்பரம்

விதவையான தாயார், 3 பெண்கள். இருவர் திருமணமானவர். ஓரளவு வசதி வந்தது. திருமணமானவர் வீடு கட்டிவிட்டனர். கடைசி பெண் வேலையிலிருக்கிறாள். தாயார் தன் வீட்டை இடித்துப் புதியதாகக் கட்டி மகளுக்குத் தரப் பிரியப்படுகிறாள். முதல் இரண்டு மாப்பிள்ளைகட்கும் சம்மதமில்லை. திருமணமான பெண்களுக்கு தாயாருடன் அபிப்பிராய பேதம். வீடு வீடாக இல்லை. சண்டையில்லை ஆனால் சச்சரவு மலிந்தது. நிலை தாயார் மனத்தைக் கலக்கியது. குடும்பம் என்றால் எல்லாம் தானிருக்கும் என்கிறார்கள். நல்லதும், கெட்டதும் எல்லாம். நல்லது கண்ணில்படவில்லை. எதையும் பேசி முடிவெடுக்கும் நிலையில்லை. பேசினால் பேச்சு வளர்கிறது. தகப்பனாரில்லை. திருமணம் ஆக வேண்டும். நிலைமை மோசமாக ஆக பெண்ணுக்கு மனம் தளர்ந்து சலிப்பேற்பட்டபொழுது, “மனிதர்களை நம்பாமல், அன்னையை நம்பலாம்” என மையம் வந்தார்.

***சுமுக மலர் சச்சரவை விலக்கியது.***

நடக்கும் பேச்சுகளுக்குப் பெண்ணால் பதில் கூறாமலிருக்க முடியவில்லை. அது முடிந்தாலும், மனத்திற்குப் பதிலில்லை. சலிப்பு விரக்தியாகும் நிலையில் “யாரிடம் எது சொல்வதற்கும் பதிலாக, எல்லாவற்றையும் அன்னையிடம் கூறு, அன்னையிடம் மட்டும் சொல்” என்ற உபதேசம் இதமாக இருந்தது. கடைப்பிடிக்க முடியவில்லை. நாளாயிற்று. முடிவாக அதை மனம் ஏற்றது. சச்சரவு அழிந்தது போல் எதிர்ப்பு மறைந்தது. தாயார் தன் இஷ்டப்படி வீட்டை இடித்துக் கட்டினாள். 6ஆம் மாதம் அத்தனைப் பிரச்சினைகளும் தீர்ந்து பெண்ணுக்கு வீடு கிடைத்தது.

✯ ✯ ✯

# லைசென்ஸ்

1950, 1940 போன்ற நாட்களில் ஒரு லைசென்ஸ் எடுக்க இளைஞர்களை அனுப்பமாட்டார்கள். அப்படி அனுப்பினால் அவர்களிடம் பணம் கொடுத்து அனுப்பமாட்டார்கள். ரூ.100 நோட்டு கண்ணில்படாத காலம். பணம் என்றால் ரூ.20 அல்லது 30 ரூபாய் பெரியவர்கள் ஷர்ட்டில் உள்பாக்கட்டில் அதை வைத்திருப்பார்கள். அடுத்தவரிடம் பணம் கொடுப்பது என்பதை உலகம் அறியாத நாளது.

Two-wheeler லைசென்ஸ் எடுக்க இளைஞன் RTO ஆபீஸுக்குப் போனான். Q நீளமானது என்பதால் நிற்க சோம்பேறித்தனம். இவன் நிலையைக் கண்ட புரோக்கர் ஒருவர் அவனிடம் வந்து ‘‘நான் லைசென்ஸ் பெற்றுத் தருகிறேன். நீங்கள் மாலையில் வந்தால் போதும்’’ என்றது இளைஞனுக்கு ‘‘Mothers' Grace’’ எனப்பட்டது. அப்பணம் திரும்பி வரும் வழியறியாதது என்று அவனுக்குத் தெரியாது. முன்பின் தெரியாத புரோக்கரிடம் 450/- ரூபாய் கொடுத்துவிட்டு தாயாரிடம் கூறினான். தாயாருக்குத் திக் என்றது. பையனுக்கு ஏன் தாயார் பயப்படுகிறார் என்று தெரியவில்லை. முதலில் போய் 450 ரூபாயை வாங்கி வா எனப் பையனை அனுப்பிவிட்டு தாயார் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அன்னையை இடைவிடாது அழைத்தாள். இப்படியும் ஒரு பிள்ளையுண்டா? அந்த புரோக்கர் கிடைப்பாரா? அது புரோக்கர்தானா? பணம் வருமா? என்ற கேள்விகளை ஒதுக்கி அன்னையை ஆழ்ந்து அழைத்தாள். பிள்ளை திரும்பி வந்தான்.

❈ ***450 ரூபாய் மீண்டும் வந்தது.***

❈ ***15/- ரூபாய் செலுத்தி லைசென்ஸ் வந்தது.***

✯ ✯ ✯